விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 24 திங்கட்கிழமை (10.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## 13 ஆல் தமிழருக்கு நன்மையில்லை

# சுயநிர்ணய உரிமையுடன் புதிய யாப்பு வேண்டும்

### வடக்கின் முதல்வர் வலியுறுத்து

**(சென்னை) அரசியல் யாப்பின் கீழ் 13ஆம் திருத்தச்சட்ட மானது மேலும் திருத்தியமைக்கப்பட்டாலும் அது தமிழருக்கு நன்மை பயக்காது. யாப்பின் அடிப்படையில் ஒற்றையாட்சி யிலிருந்து மாற்றப்படவேண்டும். எமது தனித்துவத்தை, சுய நிர்ணய உரிமையை உள்ளடக்கியதாக அரசியல் யாப்பு மாற்றி யமைக்கப்பட வேண்டும் என்று தமிழகத்தின் சென்னையில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார்.**



சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம், கே.ஜி.கண்ணபிரான் நினைவு சொற்பொழிவு தமிழகத்தின் சென்னை தியாகராஜ நகர் திருமலைப்பிள்ளை தெருவில் உள்ள வித்தியோதயா கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்று முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்ட முன்னாள நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதல்முறையாக இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தியப் பயணத்தில் குறித்த நிகழ்வில் முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தனக்கென மட்டுமன்றி இலங்கை வாழ் வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சார்பாக 20ஆம் பக்கம் பார்க்க....

## கருவுக்கு ஐ.தே.க ஆதரவு இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக கரு ஜயசூரிய நிறுத்தப்பட உள்ளதாக ஊடகங்களில் செய்திகள்வெளியாகியுள்ள போதிலும், ஐ.தே.கட்சியின் தலைமை அதற்கு எந்த அனுமதியும வழுங்காது என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து கிடைக்கும்தகவல்கள்தெரிவிக்கின்றன.

கரு ஜயசூரிய பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டால்தான் அதற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட போவதாக அந்த கட்சியின் பிரதித் தலைவர சஜித் பிரேமதாச, கட்சியின் தலைமைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலைமையில் கரு ஜயசூரியவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினால் கட்சி இரண்டாக பிளவுபடும் என்பது ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாக இருந்து வருகிறது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர 20ஆம் பக்கம் பார்க்க....

### மகிந்தவுக்கு முடியுமா?

## இன்று தெரியும்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா இன்றேல் முடியாதா என்பது தொடர்பிலான வியாக்கியானம் உயர் நீதிமன்றத்தால், இன்று திங்கட்கிழமை அனுப்பிவைகப்படவுள்ளது.

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மற்றுமொரு தடவை தேர்தலில் போட்டியிடுவதற்கு இடையூறு இருக்கின்றதா என்பது தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை இன்று 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயர்நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

இது தொடர்பில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான ஏழு நீதியரசர்கள் கொண்ட முழுமையான குழாம் 20ஆம் பக்கம் பார்க்க....

## உண்மையை கூறினால் உள்ளூரில் ஆபத்தே!

### சென்னையில் சி.வி

(சென்னை)

உண்மைகளை உள்ளூரில் கூறினால் உனக்கும் புலிகளுக்கும் தொடர்புண்டு என்று கூறி விசாரணைக்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

புலி வரப்போகிறது என்று கூறி சுமார் ஒன்றரை லட்சம் படையினரை வடக்கில் குவித்து வைத்துள்ளனர். கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையில் எல்லா விதத்திலும் அவர்கள் உள்ளிடுகின்றனர்.

பெண்களின் கதி பெருத்த சங்கடமாகவுள்ளது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சென்னையில் வைத்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம், கே.ஜி.கண்ணபிரான் அங்குரார்ப்பணம் நினைவு பேருரை நேற்று முற்பகல் 11.00 மணியளவில் சென்னை தியாகராஜ நகர் திருமலைப்பிள்ளை தெருவில் உள்ள வித்தியோதயா கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### ஹெல உறுமய

## நாளை முடிவு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய, அரசியல் ரீதியான முக்கியமான தீர்மானமொன்றை, நாளை செவ்வாய்க்கிழமை எடுக்கவிருப்பதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மத்தியகுழு நாளையதினம் கூடுவதுடன் அரசாங்கத்துக்கும் ஹெல உறுமயவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பிலான அறிக்கையும் மத்தியக்குழுவுக்கு கையளிக்கப்படவிருககின்றது.

### நினைவுச்சின்னம் அமைக்க முடிவு

(பதுளை)

இலங்கையில் கொஸ்லந்தை மீரியாபெத்தை நிலச்சரிவின்போது புதையுண்டவர்களின் சடலங்களை கண்டுபிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கை கைவிடப்பட்டிருப்பதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பொதுமக்களின் வேண்டுகோளுக்கு அமை வாகவே தேடுதல் நடவடிக்கை கைவிடப்படுவதாகவும் அரசாங்க தகவல்திணைக்களம் கூறியுள்ளது.

மண்சரிவில் புதையுண்ட இடத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமல்போனவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு அந்த இடத்தைத் தனியொரு பிரதேசமாக்குவதற்கு நடவடிக்கை 20ஆம் பக்கம் பார்க்க....

## மங்களவுக்கு ராஜபக்ஷவினர் வலைவீச்சு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் நான்கு தடவைகள் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்குமிடையில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக அரசராங்கத்தின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்றாம் திகதி இரவு மொரட்டுவை பகுதியில் வைத்து இந்த இரகசிய சந்திப்பு இடம்பெற்றதாகவும் அந்த சந்திப்பின்போது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் தற்போதுள்ள அமைச்சுக்களில் சிலவற்றை மாற்றியமைத்தல் மற்றும் மங்களவின் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. 19ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர் கலாநிதி

## விநாயகமூர்த்தி சிவசாமி

சமஸ்கிருத ஓய்வுநிலைப் பேராசிரியரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பரமேஸ்வரக் கல்லூரி இயக்குநர் சபை உறுப்பினரும், ஸ்ரீ பரமேஸ்வர ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவரும் சிறந்த கல்விமானும் ஆகிய கலாநிதி விநாயகமூர்த்தி சிவசாமி அவர்கள் அமரத்துவம் அடைந்தமைக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையும்**
**ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையும்**

(8268)

# ஓய்வுபெற்ற நீதிபதி திருநாவுக்கரசு காலமானார்



• ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி புலவர் மு.திருநாவுக்கரசு நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 76.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட விகடகவி திருநாவுக்கரசு அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சைக்குட்பட்ட இவர் நேற்றைய தினம் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் காலமானார்.

விகடகவிஎன்றபுனைபெயரில்கவிதைகளை இயற்றி வந்த மு.திருநாவுக்கரசு அவர்கள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய நீதி மன்றங்களில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

சுவாரஸ்யமான கவிதைகளையும் மேடை பேச்சுக்களையும் ஆற்றி புகழ்பெற்ற புலவர் மு.திருநாவுக்கரசு அவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இல.127/7ஏ, கோவில் வீதி, நல்லூரில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெறும். (ந)


# தேவை

மொத்த விற்பனை முகவர்களும் விற்பனை முகவர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்


☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

WESTERN UNION MONEY TRANSFER

(சி-9016)


# 57வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்




அகவை 57ல் பாதம் பதிக்கும் மாண்புமிகு அமைச்சர் **டக்ளஸ் தேவானந்தா** அவர்களை மனமார வாழத்துகின்றோம்.

தமிழினத்தின் தலைவா வாழி
தனித்தமிழர் புதல்வா வாழி
தரணியில் புகழுடையவனே வாழி
தங்கத்தமிழ் வேந்தே வாழி

வாழ்த்துவோர்
நூலக உதவியாளர்கள் - 2014
யாழ்.பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

(8267)

# துயர் பகிர்கின்றோம்

## திருமதி குமாரசாமி மணிமேகலை

மண்ணில் மலராய்: 25.05.1940 விண்ணில் விதையாய்: 11.10.2014



புளியங்கூடல் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மில்சந்தி தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட,
ஒட்டுசுட்டான் கற்சிலைமடு சம்மளந்துளாய் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் பரிபாலனசபையின் உபதலைவரும், முத்தையன்கட்டு பல நோ.கூ சங்கத்தின் பேராறு கிளை முகாமையாளருமாகிய திரு.அப்பாசாமி - குமாரசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி குமாரசாமி- மணிமேகலை 11.10.2014 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சம்மளந்துளாய் ஸ்ரீ விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.**

**பரிபாலனசபையினர்**
**சம்மளந்துளாய் ஸ்ரீ விநாயகர் ஆலயம்.**

(சி-9020)

# கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு பிறந்ததின வாழ்த்துக்கள்



அமைச்சர்

## டக்ளஸ் தேவானந்தா

**(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)**

எமது பிரதேசத்திற்கு பல்வேறு உதவிகளை வழங்கி எம்மை மகிழ்வித்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இன்று அகவை 57-ல் காலடி பதிக்கிறார். அமைச்சரை பாராட்டி வாழ்த்துவதோடு தமிழ் மக்களுக்கு அவரின் சேவை தொடர்ந்தும் கிடைக்க எல்லாம் வல்ல வல்லிபுர மாயவர் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.


*வாழ்த்துவோர்:*

**கற்கோவளம் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம், மெ.மி.த.க. பாடசாலை சமூகம், உதயதாரகை விளையாட்டுக்கழகம்,சனசமூக நிலையம் : புதுமலர்கள், ஆதவன், கலைமகள், புனிதநகர் விடிவெள்ளி, முன்பள்ளிகளின் சமூகங்கள், ஸ்ரீ கும்பி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபை, ஸ்ரீபதி விளையாட்டுக் கழகம், வேணுகான சபா மன்றம், வளர்பிறை பெண்கள் உதவி குழு**

கற்கோவளம், பருத்தித்துறை.

(சி-9018)

# "ஏழைகளின் ஒளி விளக்கே தமிழ் மக்களின் விடி வெள்ளியே அகவை 57-ல் வாழ்த்தும் வாழ்த்தை ஏற்பீர்"



அமைச்சர்

## டக்ளஸ் தேவானந்தா

**(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)**

வாழ்த்துக்கள் கூறி வந்திருக்கும் வண்ணமடல் கண்டு வாயாரப் புன்னகையா
புன் நகையை பொன் நகையாய்க் கொண்டு புது வாழ்வு வாழ
வாழ்த்துகின்றோம் வாழ்க
கொழுந்து விட்டெரியும் தீயை அணைத்து - தமிழ் மக்கள்
உயிர் காக்க தீயணைப்புப் படையை புதுப்பித்து மெருகூட்டினீர்
இத்தனையும் ஏன் செய்தீர்கள்? நீங்கள் நேசிக்கும் தமிழ் மக்கள்
நலமாக வாழ வேண்டும் எனும் உங்கள் உயர் சிந்தனையால்
செய்தீர்கள் - அதனால்
கோடான கோடி தமிழ் மக்களின்
இதயங்களில் இதயக்கனியாய் வீற்றிருக்கிறீர்கள்.
இப் பொன்னான நாளில் தங்களை வாழ்க வாழ்க வென
வாழ்த்துகிறோம் - தமிழரின் தலைவா வாழ்க வளமுடன்.

*வாழ்த்துவோர்:*

**புதிதாக நியமனம் பெற்ற தீயணைப்பு படை உத்தியோகத்தர்கள். யாழ்.மாநகரசபை**

(8272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் இல்லை என்றால் நான் போட்டியிடத்தயார்

## சஜித் பிரேமதாச அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க போட்டியிடாவிட்டால் தான் போட்டியிட தயார் என ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் 2012 ஆண்டு சம்மேளனத்தின் போது தான் இந்த நிலைப்பாட்டை தெரிவித்ததாகவும் அதில் தற்போதும் எவ்வித மாற்றங்கள் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

சகல அதிகாரங்களுடன் கட்சியின் தலைமை பொறுப்பை தன்னிடம் வழங்கினால், எந்த சந்தர்ப்பமாக இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயாராக இருப்பதாகவும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பொலிஸ் பொறுப்பதிகாரி போன்று நடித்த பிக்கு கைது!

தம்புள்ள - குருநாகல் வீதியில் பொலிஸ் அதிகாரி போல் நடித்தபிக்கு ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி சம்பவத்தில் கைதானவரது கைப்பையில் அவரது காவி யுடை காணப்பட்டதுடன் அவர் காற்சட்டை,சேர்ட் அணிந்த நிலையில் வாகன சாரதிகள் சிலருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். தான் பானந்துறை குற்றப் புலனாய்வுப் பொலிஸ் பொறுப்பதிகாரி என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)


**கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்**

(கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி-தேசிய பாடசாலை)

தரம் 06 இற்கான அனுமதி - 2015

மேற்படி அனுமதிக்காக விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிபுத் திகதி 02.12.2014

அதிபர்

(சி- 9014)

**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8221)

**அகவை 57ல் கால்பதிக்கும்**

**தமிழ் மக்களின் காவலனே-வாழி வாழி...**

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)



வாழ்த்துக்கள் கூற நினைத்தோம்
வார்த்தைகள் வாயிலிருந்து வரவில்லை-ஏன்
எத்தனைக்கு வாழ்த்துவது பிறந்த நாள் நல்வாழ்த்தா
தமிழ் மக்களுக்காய் அல்லும் பகலும் அரும்பாடு படுவதற்காய் வாழ்த்தா
குடும்பத்தினரை வெளிநாட்டில் வசிக்க வைத்து
சுயநல அரசியல் புரிபவர்களுக்கு மத்தியில்
தமிழ் மக்களுக்காய் பொதுநல அரசியல் புரிவதற்கு வாழ்த்தா
நடுக்கடலில் தத்தளித்த தமிழ் மக்களுக்கு
ஓடம் போல் கரை சேர்க்க வந்ததற்கு வாழ்த்தா
தலைவா, வீணையின் நாயகனே- நீங்கள்
மட்டுமே எங்கள் விக்கினங்கள் தீர்ப்பீர்
கோடான கோடி தமிழ் மக்களின் இதயங்களில்
வாழும் எங்கள் இதய வீணையே- எங்கள்
வாழ்த்தொலி உங்கள் செவியில் கேட்கிறதா
அத்தியடியில் அவதரித்த உத்தமனே
தமிழ் பெருங்குடி மக்களின் ஒரேயொரு காவலனே
அமைச்சர் பெருந்தகையே- இந் நன்நாளில்
பல்லாண்டு காலம் வாழ் வாழ்கவென
மனதார வாழ்த்துகின்றோம். வாழ்க வாழ்க.

வாழ்த்துவோர்:- R. நிரோஷானந், R. கவிகரன், த.கருணாகரன், T. தர்ஷானந், M.S. றிஷாத், K. ஜெகதீஷன், நிஷாந்தன், B. தமிழினி, J.சாரங்கா, K. வினுஷியா, A.அன்பரசி, S.நிஷாந்தினி, நிரஞ்சீவ், கார்மேல்பவியோலா, R. கிரிஷாந்தி, P.வசிகரன்.

(8296)


## இராசி பலன்

10.11.2014
(ஐப்பசி 24, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 4.02 மணிவரை
மிருகசீரிடம் மாலை 5.40 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-01.35 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம், அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** வாய்ப்புக்கள் தேடி வரலாம், உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் சிலவற்றில் மாற்றம் செய்ய நேரிடலாம், காணாமற்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** பொருட்சேர்க்கைக்கு அத்திபாரமிடுவீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** செல்வாக்கு மேலோங்கும் நாள்,பக்குவமாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆன்றோர் சந்திப்புண்டு, ஒருசில கட்டுப்பாடுகள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், முயற்சிகளில் சில தாமதங்கள் உருவாகும்,செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**கும்பம்:** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், வளர்ச்சிப்பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொலைதூரச் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு, தாய்வழி உறவில் நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாமல்நிதிநிறுவனத்தின்வடமாகாணக்கிளையின்முதலாம்ஆண்டுநிறைவுவிழாகடந்த6ம்திகதிவியாழக்கிழமைகொழும்புபங்குப்பரிவர்த்தனைநிலையத்தின்கேட்போர்கூடத்தில்நடைபெற்றதைப்படத்தில்காணலாம்.

# சுற்றுலாத் துறை வளர்ச்சி 21.5%

கடந்த வருடம் முதல் 10 மாதங்களை விட,இந்தவருடம் முதல் 10 மாதத்தில் இலங்கையின் சுற்றுலாத்துறை 21.5 வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளது. குறித்த காலப்பகுதியில் சீனாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 139% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும்,இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 12,28,754 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத் தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் அதற்கு அடுத்த படியாக பிரித்தானியாவில் இருந்தே வருகை தந்துள்ளனர். கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளை விட அது 4.4% அதிகரிப்பாகும்.

இந்த வருடம்முதல்10 மாத காலப்பகுதியில்இலங்கைக்கு அதிகளவில்வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் வரிசையில் சீனா 3-ம் இடத்தில உள்ளது.

இந்த வருடத்தில் 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவருவதுடன் அடுத்த 2 வருடங்களில் 25 இலட்சமாக உயர்த்துவதே இலங்கை அரசாங்கத்தின் திட்டமாகும்.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# கணனித் தீர்வு -வேம்படி முன்னிலை

இலங்கையில் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற கணினிப் போட்டிகளில் முதன் முறையாக யாழ்ப்பாணத்தின் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை முதல 10 இடங்களில் இடம்பிடித்ததோடு, வேம்படி உயர் பாடசாலை மாணவிகளின் கணினித் தீர்வுகளும் முக்கிய இடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சிறுவர் உரிமைமாநாட்டின்25-வது வருடத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான நிதியம் (UNICEF) 2014-ம் ஆண்டை சர்வதேச சிறுவர் ஞாபகார்த்த வருடமாக பிரகடனப் படுத்தியுள்ளது.




இதனை அனுஷ்டிக்கும் முகமாக யுனிசெவ் இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் பங்குபற்றச் செய்து குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கணினி தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளை சிறுவர்கள் மூலமாகவே பெற்றுக் கொள்ளும் முகமாக இலங்கையில் முதன் முறையாக 'ஹெக்கதோன்' போட்டியொன்றை நடத்தியது.

நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகள் இந்த போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இந்த போட்டியில் முதல் சுற்றில் 25 சிறந்த பாடசாலைகள் தெரிவு செய்யபட்டன. இந்தபாடசாலைகள மத்தியில் கடும் போட்டி நிலவியதோடு, பல தீர்வுத் திட்டங்களும் முன்வைகப்பட்டன. இந்தத் தீர்வுத் திட்டங்களின் அடிப்படையில் அரையிறுதிச் சுற்றுக்கு 10 பாடசாலைக் குழுக்கள்தெரிவுசெய்யப்பட்டன.

இந்தநிலையில், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள் முனவைத்த கணினித் தீர்வானது பாடசாலை மட்டத்தில் உள்ள மாணவர் கள தமது திறமைகளை எவ்வாறு உலகிற்கு வெளிப் படுத்தலாம் என்பதாகும்.



கொழும்பு பங்குச் சந்தை அண்மைக் காலமாக உயர் பெறுமதிகளை பதிவு செய்த வண்ணமுள்ளது.வங்கிகளின் வட்டி வீதங்கள் குறைவடைந்துள்ள நிலையில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடுகளை மேற்கொண்டு சிறந்த இலாபங்களைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பது குறித்து விளக்கும் வகையிலான கருத்தரங்கு ஒன்று கொழும்பு பங்குச்சந்தை யாழ்ப்பாணக் கிளையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இக்கருத்தரங்கின் நிகழ்வுகளையே படங்களில் காண்கிறீர்கள்.

# CDBக்கு வெண்கல விருது

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி (CDB) நிறுவனம், அண்மையில் BMICH இல் இடம்பெற்ற SLIM வர்த்தகநாம சிறப்பு விருது விழா 2014இல் வெண்கல விருதினை தனதாக்கிக் கொண்டது.

வங்கியியல், காப்புறுதி, தொலைத் தொடர்பாடல் மற்றும் ஏனைய சேவை துறைகளில் உள்ள செயற்திறன் மிக்க சேவை 'வர்த்தக நாமங்களை அடையாளப்படுத்தும் 'ஆண்டிற்கான சிறந்த சேவை வர்த்தகநாமம்' பிரிவில் போட்டியிட்டு CDB நிறுவனம் இவ் விருதினை வென்றெடுத்தது.

வருடத்திற்கான சிறந்த சேவை வர்த்தகநாமம் பிரிவில் விருதை வென்றமையை விட தரமான சேவை நோக்கிய எமது பங்களிப்புக்கான உயரிய ஒப்புதலாக அமைந்துள்ளது என சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் கார்த்திக் இளங்கோவன் தெரிவித்தார்.

எமது வர்த்தகநாமத்தை கட்டியெழுப்புவதற்காக நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பல மணிநேரம் கடினமாக உழைத்தோம். இந்த விருதானது CDB அணியினரின் உந்துசக்திக்கு கிடைத்த ஒப்புதலாகவும் வர்த்தகநாமத்தை முன்னோக்கி கொண்டு செல்ல உதவுவதாகவும் அமையும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,326.81 | 7,416.15 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,087.38 | 4128.3 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 8,301.531

[illegible] லங்கா ஐஓசி(63.10),ஸ்ரான்டட் கப்பிரல்(91.60), எஸ்.எம்.பி.லீசிங்(0.60),சொப்ட் லொஜிக்(18.90),அபான்ஸ் பினான்ஸ்(30.70).

[illegible] கூஜே(63.60),செரன்டிப் இன்ஜி(99.10), மிரமர்(61.70),புளூ டைமன்ட்(0.80),கொத்மலை ஹோல்டிங்([illegible]).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# 6,758 கார்களை திரும்ப பெறுகிறது 'ஆடி'



ஜெர்மனியைச் சேர்ந்த சொகுசு கார் தயாரிப்பு நிறுவனமான ஆடி, இந்தியாவிலிருந்து 6,758 ஏ4 வகை செடன் கார்களை திரும்ப பெறுவதாக அறிவித்து உள்ளது. இக்கார்கள் கடந்த 2011-ம் ஆண்டு நவம்பர் முதல் 2014-ம் ஆண்டு அக்டோபர் வரையில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

காற்றுபை (ஏர்பேக்) கட்டுப்பாட்டு அலகில் உள்ள மென் பொருளை மேம்படுத்தி தருவதற்காக மட்டுமே மேற்கண்ட கார்கள் திரும்ப பெறப்பட உள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துஉள்ளது.

# டுபாய் கண்காட்சி தொடங்கியது

உலகின் புகழ்பெற்ற கண்காட்சிகளில் ஒன்றான டுபாய் குளோபல் வில்லேஜ் கண்காட்சி கடந்த வாரம் தொடங்கியது. இக்கண்காட்சி அடுத்த ஆண்டு ஏப்ரல் 11 வரை நடைபெறும். உலகில் உள்ள சுற்றுலா பார்வையாளர்களை கவரும் வகையில் சென்ற ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு புதியதாக அமெரிக்கா, ஈராக், கம்போடியாவுடன் இணைந்து 70 நாடுகள் பங்கேற்கின்றன. கண்காட்சியில் 3,500க்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 50 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வரு வார்கள் என எதிர்பார்ப்பதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். பல்வேறு நாடுகளின் கலை மற்றும் கலாச்சாரத்தை நினைவுகூரும் வகையில் பவிலியன்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. உலக நாடுகளில் உள்ள பல்வேறு பொருட்கள் விற்கும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.50 | 132.38 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.43 | 210.30 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.41 | 164.66 |
| சுவிஸ் பிராங் | 132.24 | 137.03 |
| கனேடிய டொலர் | 112.66 | 116.45 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.00 | 114.20 |
| சிங்கப்பூர் டொலர் | 99.47 | 102.71 |
| ஜப்பான் யென் | 1.11 | 1.15 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.62 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 28.07.1928

விண்ணில் 23.10.2013



## உயர்திரு சீமான் கார்த்திகேசு சுப்பிரமணியம் தியாகராஜா

சின்னாலடி, காரைநகர்

(பிரபல வர்த்தகர், கே.எஸ்.தியாகராஜா அன்சன்ஸ், கம்பஹா)

(திதி:- 10.11.2014)

நந்தா விளக்கு அனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனி அறத்தின் தாயே! தயா நிலையே!
எந்தாய்! இகல் வேந்தர் ஏறே! இறந்தனையே!
அந்தோ! இனி வாய்மைக்கு ஆர் உளரே மற்று?

---

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது...

இல. 49, 33ஆவது லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு- 06

தியாகராஜா துவாரகேஸ்வரன்
சின்னாலடி, காரைநகர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை அழிக்க அமெரிக்க படைகள் விரைவு

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை அழித்தொழிப்பதற்கு ஈராக் மற்றும் சிரியாவுக்கு அமெரிக்கா மேலும் 1500 படை வீரர்களை அனுப்பி வைத்துள்ளதால் மோதல் மேலும் தீவிரம் அடைந்துள்ளது.**

ஈராக் மற்றும் சிரியாவில் பெரும்பாலான பகுதிகளை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி தனிநாடு அமைத்துள்ளனர். சர்வதேச நாடுகளுக்கு புதிய அச்சுறுத்தலாக உருவாகியுள்ள அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஈடுபட்டுள்ளன.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் ஈராக்கில் 400 தடவை குண்டுகள் வீசப்பட்டுள்ளன. சிரியாவில் 300 தடவை குண்டு மழை பொழியப்பட்டுள்ளன.இதன் மூலம் நூற்றுக் கணக் கான தீவிரவாதிகள் கொல்லப் பட்டுள்ளனர். ஆயுத வாகனங்களும், பல தீவிரவாத முகாம்களும் அழிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே அமெரிக்கா ஏராளமான இராணுவ வீரர்களை அனுப்பியுள்ளது.அவர்கள் ஈராக் இராணுவத்துக்கு 9 இடங்களிலும். குர்திஷ் பெஷ்மெர்கா படைகளுக்கு 3 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகின்றனர்.இவை தவிர அமெரிக்காவின் இராணுவ ஆலோசகர்கள் ஏராளமானவர்கள் ஈராக்குக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் ஈராக் இராணுவ வீரர்களுக்கு தேவையான போர் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். இருந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் அமெரிக்க கூட்டு படையுடன் தொடர்ந்து போரிட்டு வருகின்றனர். எனவே அமெரிக்கா ஈராக்குக்கு கூடுதலாக மேலும் 1500 இராணுவ வீரர்களை அனுப்பியுள்ளது.

அவர்கள் தற்போது அங்கு முகாமிட்டுள்ள இராணுவ வீரர்களுடன் சேர்ந்து பணிபுரிவார்கள்.இந்த தக்வலை அமெரிக்க வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் ஜோஷ் இயர்னெஸ்ட் தெரிவித்துள்ளார்.அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பாராளுமன்ற எம்.பிக்களை சந்தித்து பேசிய பின்பு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஏற்கனவே. ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிக்கு எதிராக போரிட 35 ஆயிரம் கோடி வழங்க பாராளுமன்றத்தில் ஒபாமா கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




நாலந்தா கல்லூரி நிறுவப்பட்டதன் 90ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட நாலந்தா பாதயாத்திரை நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ராஜித சேனாரத்ன, பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, பிரதி அமைச்சர் சரத் வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால மற்றும் கல்லூரியின் அதிபர் கர்னல் ரஞ்சித் ஜயசுந்தர ஆகியோர் கலந்து கொண்டனர். இம்மாதம் முதலாம் திகதியுடன் நாலந்தா கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 90 வருடம் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 |
| தக்காளி | 130 | 120 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 50 |
| கோவா | 120 | 120 | 100 |
| கரட் | 140 | 140 | 200 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 |
| பாகற்காய் | 200 | 170 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 160 | 150 | 140 |
| லீக்ஸ் | 240 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 200 | 150 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 160 |
| போஞ்சி | 200 | 150 | 200 |
| கத்தரிதம் புள்ள | 60 | 40 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 140 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35-40 |
| இராசவள்ளி | 250 | - | — |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 188


Search for people, places and things Nagendram Home

ராகுலன் பாலா



யாரோ ஒருவனின் பாதம் சுட்டுவிடுமென்று கீழே வீசிய சிகரெட் துண்டை மிதித்துவிட்டு சென்றவன் சற்று முன் திணறிய அவன் நுரையீரலை பற்றிய கவலையேதுமின்றி

துஷா துஷா




மரண மாஸ்




ராஜமணி சுப்பிரமணி

“பிழைக்கிறது கஷ்டம்னு டாக்டர் சொன்னார்னு சொன்னியே யாருக்கு என்னாச்சு?”



“டாக்டருக்குத்தான், இன்னிக்கு ஒரு ஆபரேஷன் கேஸ்கூட அவருக்கு கிடைக்கலையாம்?”

வினோ ரிது




டொறின் மன்மதநாயகம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 275 பாகிஸ்தான் குழந்தைகள் பலி!

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வறட்சியின் பாதிப்பாலும், சுகாதார குறைபாட்டாலும் 275 குழந்தைகள் பலியானதாக தெரியவந்துள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையோரமுள்ள சிந்து மாகாணத்தின் தார்பார்க்கர் மாவட்டம், அகன்ற பாலைவனப் பிரதேசமாகும். இங்கு வசிக்கும் மக்கள் தொகையில் சுமார் 35 சதவீதம் பேர் இந்துக்கள் என்பது கடந்த 1998 ஆம் ஆண்டு இப்பகுதியில் நடத்தப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இதனால், உண்டான வறட்சி மற்றும் சுகாதார குறைபாட்டின் விளைவாக இரத்தசோகை, ஊட்டச்சத்து பற்றாக்குறை, இரத்தத்தில் நோய்க்கிருமித் தொற்று, பிறக்கும்போது ஏற்படும் சுவாசக் கோளாறு போன்ற உபாதைகளால் கடந்த 11 மாதங்களில் மட்டும் 275 குழந்தைகள் பலியானதாகவும், இந்த குழந்தைகள் அனைத்தும் ஐந்து வயதுக்குட்பட்டவை என்றும் தார்பார்க்கர் மாவட்ட துணை கமிஷனர் ஆசிப் ஜமீல் தெரிவித்துள்ளார். (இ)


அகவை 57 இல் கால் பதிக்கும்
தமிழ் மக்களின் தோழனே வாழ்க



கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

உன் புகழ் பிறர் சொல்ல
தற்பெருமை நீ கொள்ளாது
தரணியில் நல்வாழ்வு வாழ
மனமது ஆணையிட்
எம் அனைவருக்கும்
உதவி செய்த நீங்கள்
நீடூழி வாழ நாவாயூர் மக்கள்
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- கண்ணபுரம், மண்பிட்டி
கரையோர வாழ் மக்கள்.

(8266)







பாராட்டி வாழ்த்துகின்றோம்

துரைரத்தினம் சுசீதா
(நுண்கலைமாணி)

யாழ். பல்கலைக்கழகத்தில்
10.11.2014 அன்று
நடைபெறவிருக்கும் 50
ஆவது பட்டமளிப்பு விழா
வில் நுண்கலைமாணிப்
பட்டத்தை பெறும் எமது
மகளை வாழ்வில் மேலும் பல
பட்டங்களை பெற்று
சிறப்புடன் நீடூழி வாழ
வாழ்த்துகின்றோம்.

Congratulations!

வாழ்த்துவோர்:-குடும்பத்தினர்
து.பாரத் (அண்ணா)
சின்னக்கடற்கரை, தொண்டைமானாறு,
யாழ்ப்பாணம்.

(8262)



தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சை-2014
சாதனையாளர்களை வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்



தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த சத்தியலிங்கம் சர்மினி (166 புள்ளிகள்), கோணேஸ்வரன் கோசலன் (159 புள்ளிகள்) ஆகிய மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

மேலும் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று சிறப்பித்த பின்வரும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

01. கி.புருஷோத்- 152
02. பா. நிதர்சனா- 150
03. இ. தாருகா- 142
04. சி. தேனுசன் - 141
05. யோ. பவனிகா- 138
06. சா. தனுசன் - 136
07. ச.கோபிதா- 136
08. வி. தனுஜன் - 132
09. வி.கோபிகா - 129
10. ச. நிருஷா - 128
11. வி.மதுஷா - 128
12. ந.வதுஷா - 125
13. யு. திலக்ஷா - 125
14. வி.கிருஷாந்தினி-125
15. க.ருபிதா - 116
16. சி.விதுஷா - 116
17. சி.கிருஷாந்தினி - 109
18.சி.அட்ஷயா- 104
19. ப.தர்ஷன் - 91
20. பு.விதுஷா - 90
21. கு.சர்மிலா - 87
22. த. நிதர்சன் - 85
23. பா. தர்சிகா -71


(8258)

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பித்ததும் நானே... முடித்ததும் நானே !



## ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அதிரடி

12 ஆண்டுகள் கழித்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராகி இருக்கிறார் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன். அதிரடி மற்றும் பரபரப்பு கருத்துகளுக்குப் பெயர் போன அவர், இப்போது எதையுமே நிறுத்தி நிதானமாகக் கையாளுகிறார். எதிர்க் கட்சிகளின் நெருக்கடி, சொந்தக் கட்சிக்காரர்களின் கொசுக்கடி ஆகிய இரண்டும் இன்னும் தொடங்காததால் கூட இருக்கலாம். அவரைச் சந்தித்தோம்.

மாநிலத் தலைவர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா... இந்தப் பதவிக்காகப் பல தலைவர்கள் கடுமையாக முயர்சித்தார்களே?

பதவிக்குக் கடும் போட்டி இருந்தது உண்மைதான். ஆனால் அதை போட்டி என்று சொல்ல முடியாது. கட்சிக்காகப் பணியாற்ற வேண்டும் என்கிற ஆர்வம் என்று எடுத்துக் கொள்ளுங்கள். அந்த விருப்பம் காரணமாகப் பலரும் ஆசைப் பட்டிருக்கலாம். அது அவர்களுடைய உரிமை. எனக்குத் தலைவர் பதவி மீண்டும் கிடைக்கும் என்பதைத் துளிகூட எதிர்பார்க்கவில்லை. இதறகாக நான் யாரிடமும் சிபாரிசுக்குச் சென்றதும் கிடையாது.

தலைவரான பிறகு உங்களுக்கு முன் உள்ள அதிகப்படியான சவாலகள் என்னென்ன?

மிகப்பெரிய அச்சம் எனக்கு ஏற்பட்டுள்ளது. சாமான்ய பதவியல்ல இது. எனக்குப் பொறுப்புகள் அதிகரித்திருக்கின்றன. கடந்த காலங்களில் தமிழக மக்களுக்கு காங்கிரஸ மீது கோபம் இருந்தது. நான்கு மாதங்களுக்கு முன்பு இருந்த கோபம் இப்போது குறைந்துள்ளது. கோபங்கள் மன வருத்தங்களாக மாறியிருக்கின்றன. இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும் என்பது தான் என்னுடைய தலையாயப் பணி.

12 வருடாங்களுக்கு முன்பு தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த போது உங்களது விமர்சனங்கள் காட்டமாக இருக்குமே... இப்போதும் அதே பரபரப்பை எதிர்பார்க்கலாமா?

என்னுடைய வயது, அறிவையும் அனுபவத்தையும் கொடுத்திருக்கிறது. நிதானத்தோடும் பொறுமையோடும் செயற்படும் தருணம் இது. என்னுடைய கருத்து தாறுமாறாக' இருக்காது. சரியாக இருக்கும். நான் யாருக்கும் பயப்பட மாட்டேன். நல்லது செய்தால் மனம் திறந்து பாராட்டுவேன். தவறு செய்தால் அதைச் சுட்டிக் காட்டுவேன். அது யாராக இருந்தாலும் சரி. என்னுடைய இயல்பே அதுதான். அதை எப்போதும் மாற்றிக்கொள்ள முடியாது.

என்னை ஒரு பொருட்டாகவே காங்கிரஸ் தலைமை மதிக்கவில்லை' என்று ஞானதேசிகன் கூறியுள்ளாரே?

நான் ஞானதேசிகனை கனமான மனிதர்' என்றுதான் முதலில் நினைத்திருந்தேன். ஆனால், அவர் ஓர் உயர்ந்த மனிதர் என்பதை தெரிந்துகொண்டேன். ஞானதேசிகன் கட்சியைவிட்டு சென்றிருந்தாலும் சிறந்த மனிதர் அவர். கடைசி வரை அவர் மீது எப்போதும் எனக்கு மரியாதை இருக்கும். கடந்த மூன்றாண்டுகள் காங்கிரஸ் கட்சிக்காக சிறப்பாகச் செயற்பட்டார். இன்னும் சிறப்பாக அவர் செயற்பட்டிருக்க முடியும். அவரே பணியாற்ற விரும்பினாலும் அவருக்கு இடைஞ்சல்கள் கொடுத்தவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். இப்போது யார் ஜி.கே.வாசனை தவறாக வழிநடத்தி காங்கிரஸில் இருந்து பிரிந்து செல்லவைத்தார்களோ, அதே நால்வர் அணி'தான் ஒரு காலத்தில் ஞானதேசிகனுக்கும் பெரும் குடைச்சல்களைக் கொடுத்தது. நால்வர் அணியின் வழிகாட்டுதல் நல்ல பயணத்துக்கு உதவாது.

உறுபபினர் அட்டை பிரச்சினை ஓய்ந்துவிட்டதா... மூப்பனாரின் படம் உறுப்பினர் அட்டையில் இருக்குமா?

அது ஒரு பிரச்சினையே இல்லை. பொய்யாகப் பரப்பப்பட்ட பொய். சின்னாரெட்டி அந்த உறுப்பினர் அட்டைகளை நிறுத்திவைக்கச் சொன்னது உண்மைதான். அது படங்களுக்காக இல்லை. காமராஜர் படத்தை போட்டாலே அதில் மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி, சிவாஜி கணேசன், மரகதம் சந்திரசேகர் என அனைவரும் அடக்கம். மொத்த தலைவர்களையும் உள்ளடக்கிய தலைவர் தான் காமராஜர். அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது !

திராவிட கட்சிகளைத் தவிர்த்து தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி வளராமல் போனதற்கு என்ன காரணம்?

காங்கிரஸ் என்பது ஒரு மக்கள் இயக்கம். அ.தி.மு.க மற்றும் தி.மு.க ஆகிய கட்சிகளுக்கு இருக்கும் சதவிகித ஓட்டுகளிலே எனக்கு நம்பிக்கை கிடையாது. காரணம், மொத்த ஜனத்தொகையில் 10 சதவிகிதம் வாக்காளர்கள்தான் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள். மீதமுள்ள 90 சதவிகிதத்தினர் பொதுமக்கள் தான். தேர்தலுக்கு முன்னர் நிலவும் சூழ்நிலைகளால்தான் கட்சியின் வெற்றி தோல்விகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு தேர்தலில் முழுமையாக தோற்கடிக்கப்பட்ட எம்.ஜி.ஆர் அடுத்த தேர்தலில் பிரமாண்ட வெற்றி பெறவில்லையா? வெறும் இரண்டு இடங்களை பெற்ற பிஜேபி இன்றைக்கு பெரும்பான்மையோடு வரவில்லையா? தமிழகத்தில் காங்கிரஸ் மீது மாறிமாறி குதிரை சவாரி செய்து போட்டியிட்டன திராவிடக் கட்சிகள். எங்களுடைய ஆதரவோடு தான் அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். எங்களை வளரவிடாமல் நன்றாகப் பயன படுத்திக் கொண்டது தான் மிச்சம்.




காங்கிரஸில் இருந்து வெளியேறி பலரும் ஜி.கே.வாசனின் புதிய கட்சியில் இணைகிறார்களே?

காங்கிரஸ் தொண்டர்களைப் பொறுத்தவரை 90 சதவிகித காங்கிரஸார் இன்னும் எங்களுடன் தான் இருக்கின்றனர். அவர்கள் தெளிவாக இருக்கின்றனர். வேறெங்கும் செல்லவில்லை. தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அன்று மூப்பனார் தமிழ் மாநில காங்கிரஸைத் தொடங்கினார். அன்று 100 பேர் ஆதரவு தெரிவித்தார்கள்.

இன்று ஒருவர்கூட ஆதரிக்கவில்லை என்பதுதான் உண்மை. முன்னாள் எம்.எல்.ஏக்கள் 15 பேர் எங்களிடம் இருக்கிறார் கள் என தம்பட்டம் அடிக்கிறார்கள். முன்னாள் எம்.எல்.ஏக்கள் மொத்தம் 400 பேரில் 15 பேர் என்பது ஒரு பெரிய எண்ணிக்கை இல்லை. நிதர்சனத்தில், தற்போது ஐந்து எம்.எல்.ஏக்களில் மூவர் எங்களிடம்தான் உள்ளனர். போனவர்கள் திரும்பி வருவார்கள்!

ஜிகே.வாசனின் புதிய கட்சி காங்கிரஸுக்கு மாற்றாக அமையுமா?

காங்கிரஸை அவர்களோடு ஒப்பிடாதீர்கள். அவர் தொடங்கும் கட்சி என்பது லெட்டர் பேட் கட்சிகளுக்கு வேண்டுமானால் சவாலாக இருக்குமே தவிர, காங்கிரஸ் போன்ற பேரியக்கத்துக்கு ஒரு போதும் சவாலாக இருக்க முடியாது. இன்னும் ஒரு வாரகாலத்தில் அது உங்களுக்கே தெரியும். காலில விழாத குறையாக கட்சியை விட்டுப் போகாதே என்று வம்படியாகக் கதறினேன். போகாதே போகாதே என் கணவா பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்' என்று சொல்லிப் பார்த்தேன். மீறிப் போவேன் எனறு அடம்பிடித்தார் ஜி.கே.வாசன். இப்போது எந்தப் பதவியிலும் இல்லாததால் விரக்தியில் ஏதேதோ பேசுகிறார்.

ஜி.கே.வாசன் த.மா.கவை காங்கிரஸுடன் இணைத்தபோது காங்கிரஸின் மாநிலத் தலைவர் நீங்கள்தான்... தற்போது அவர் வெளியேறும்போதும் நீங்கள் தான் மாநிலத் தலைவர் எப்படி உணர்கிறீர்கள்?

ஜி.கே.வாசனுக்கு ஆரம்பித்து வைத்ததும் நானே... முடித்து வைத்ததும் நானே !


2016 சட்டமன்றத் தேர்தலுக்கு தயாராகிவிட்டீர்களா?

இப்போதே தயாராகத்தான் இருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றும். இல்லையென்றால், காங்கிரஸ் கட்சியின் ஆதரவில்லாமல் யாரும் ஆட்சி அமைக்க முடியாது! நம்பிக்கையுடன் இருக்கிறார் புதிய தலைவர்!

**- ஜூனியர் விகடன்**

# பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால்

# சோபித தேரருக்கு ஆதரவளிக்க தயார்



(கொழும்பு)

பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் மாதுலுவாவே சோபித தேரருக்கு ஆதரவளிக்கத் தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சோபித தேரர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் எமது மக்கள் சந்தேகமின்றி ஆதரவளிப்பார்கள்.

குறிப்பாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முன்வந்தால் ஆதரவளிப்பது குறித்து கவனம் செலுத்த முடியும்.

பௌத்த பிக்கு ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாவதில் எமக்கு எவ்வித பிரச்சினைகளும் கிடையாது.

மௌலவி குருக்கள் அல்லது பௌத்த பிக்கு என்ற காரணத்தினால் முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிராகரிக்க மாட்டார்கள்.

எனினும் நாட்டில் தமிழர் ஒருவரோ அல்லது முஸ்லிம் ஒருவரோ ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது. எனவே, சிறுபான்மை மக்கள் எந்தநாளும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஓர் வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக உரிய முறையில் ஆட்சி செய்யக் கூடிய ஒருவரை முஸ்லிம் மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள் என ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தமிழ் மொழிக்கு உரிய அங்கீகாரம் வழங்கவில்லை

## ஹந்துன் நெத்தி எம்.பி.குற்றச்சாட்டு

**அரச நிறுவனங்களில் தமிழ்மொழி மூலம் சேவையாற்றுவதற்கான ஊழியர்களின் தொகை போதுமானதாக இல்லை. அதில் பாரிய வீழ்ச்சி காணப்படுகிறது என சபையில் சுட்டிக்காட்டிய ஜனநாயக தேசிய முன்னணி எம்.பி.சுனில் ஹந்துன் நெத்தி இனங்களிடையே தேசிய நல்லிணக்கம் தொடர்பாக மார்தட்டும் அரசு தமிழ் மொழி மூலம் அரச சேவைக்கு உரிய இடம் வழங்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.**



பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே ஹந்துன் நெத்தி எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இனங்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த திட்டங்களை முன்னெடுப்பதாக கூறும் அரசு தமிழ் மொழிக்கும் தமிழ் ஊழியர்களுக்கும் உகந்த இடத்தை வழங்கவில்லை.

கொழும்பு மாவட்ட செயலகததில் ஒரேயொரு தமிழ் மொழி பெயர்ப்பாளர் மட்டுமே உள்ளார். வேறு எவரும் கிடையாது.

திம் பிரிகஸ்யாய பதிவாளர் திணைக்களத்தில் 2 தமிழ்மொழி பெயர்ப்பாளர்களும் கொழும்பு பிரதேச செயலகத்தில் ஒரேயொரு தமிழ் மொழிபெயர்ப்பாளர்மட்டுமே சேவையில் உள்ளனர்,

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணப் பதிவுப் பத்திரங்களை பெறறுக்கொள்வதற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் மக்கள் தமது அத்தாட்சிப் பத்திரங்களின் தமிழ் மொழி தொடர்பான ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

எனவேவெறுமனேதமிழ்மொழிக்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக அரசு கூறுவதாலும் சமூக ஒருமைப்பாடு தேசிய நல்லிணக்கமும் தொடர்பான அமைச்சை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் எனக் கூறுவதாலும் எவ்விதமான பலனும் கிடையாது.

மாறாக அரச நிறுவனங்களில் பாரிய குறைபாடாகவுள்ள தமிழ்மொழி மூலமான சேவையாளர்களை நியமிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜீ.ஜீ.ஏற்படுத்திய ஒற்றுமையை பாதுகாப்பதே அஞ்சலியாகும்!

## கூட்டணியின் செயலாளர் ஆனந்த சங்கரி தெரிவிப்பு


ஜீ.ஜீயின் பெயரை எவரும் சிதைத்து விடாது பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

அதேபோன்று அவர் ஏற்படுத்திய ஒற்றுமையை பாதுகாப்பதே நாம் செலுத்தும் அஞ்சலியாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

அமரர்சட்டமாமேதை ஜீஜீபொன்னம்பலத்தின் 113 ஆவது ஜனன தினம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியள வில் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை காரியாலயத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வ. ஆனந்தசங்கரி, சட்ட மாமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 113 ஆவது ஜனன தினமான இன்று (நேற்றுமுன் தினம) தமிழ் மக்களாகிய நாம் மட்டுமல்ல நாடு பூராகவும் ஒருமித்து அனைத்து இன மக்களும் நினைவு கூர வேண் டிய தினமாகும்.

அன்னார் இறப்பதற்கு முன்னர் தந்தை செல்வாவின் அழைப்பை ஏற்று தனது நீண்டகால அரசியல் குரோதத்தை மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கூட்டுத் தலைவராக பதவியை ஏற்றார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழரசு கட்சியும் சங்கமமாகியே தமிழர் ஐக்கிய முன்னணி உருவாகியது. பின்னர்



தமிழர் விடுதலைக் கூட்டணி என பெயர் மாற்றமும் பெற்றது. சட்ட மாமேதை ஜீஜீ யின் சட்ட வல்லமை இந்தியாவிலும் பரவி காணப்பட்டது.

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி மீதான வழக்கொன்றில் அன்னார் ஆஜராக வேண்டுமென விடுத்த கோரிக்கை என்னால் நிறைவேற்றி வைக்கப் பட்டது. அவ்வழக்கை இலவசமாகவே வாதாடி வென்று கொடுத்தார். அவ்வாறு இடம்பெற்றிருக்கா விட்டால் இன்று கலைஞரின் அரசியல் வாழ்வுக்கு தடைஏற்பட்டிருக்கும் என ஒரு சந்தர்ப்பத்தில் த்மிழக சட்டசபை சபாநாயகர் அமரர் இராசாராம் நிகழ்வொன்றில் பகிரங்கமாக கூறியிருந்தார்.

அன்று ஜீ.ஜீ. பொன்னம்பலமும் தந்தை செல்வாவும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்குவதற்காக ஒத்துழைத்தமை முழு தமிழ் சமூகத்தையும் ஒன்றிணைத்து சரித்திரம் படைத்தனர் என திருமதி. அமிர்தலிங்கம் கூட தனது அறிக்கையொன்றில் பாராட்டியிருந்தார்.

இவ்விரு பெருந்துருவங்களின் சந்திப்பை சாதாரணமான எவராலும் அழித்துவிட முடியாதென்பதை சரித்திரம் உலகுக்கு எடுத்துக் கூறும். அமரர் ஜி.ஜியின் பெயரை எவரும் சிதைத்து விடாது பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையுமாகும். அதேபோன்று அன்னார் ஏற்படுத்திய ஒற்று மையை பாதுகாப்பதே நாம் இவ்விரு பெருந் தலைவர்களுக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

ஜீ.ஜீயின் இறுதி காலத்தின் சில நாட்களை அவருடன் செலவிட்டு அவரை இறுதியாக சந்தித்து பேசிய இலங்கை தமிழ் அரசியல்வாதி என்ற பெருமையும், அதேபோல் இன்றைய தமிழ் அரசியல்வாதிகளில் 1947 ஆம் ஆண்டு முதன் முதல் அமரர்களான ஜீ.ஜீயையும், தந்தை செல்வாவையும் சந்தித்த பெருமை தனக்குண்டு என்றார்.

இந்நிகழ்வில் கட்சி முக்கியஸ்தர்களான சிவகுலசிங்கம், கா.குலசேகரம், ந.மதியழகராசா, சா.அமிர்தலிங்கம், செ.விஜயரெத்தினம், க.கணேசன் ஆகியோர் உரையாற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## எது புனிதமான இடம்

ஒரு ஊரிலே அண்ணன், தம்பி என இரு சகோதரர்கள் இருந்தார்கள். அந்த இருவரில் அண்ணனுக்கு திருமணமாகி விட்டது. ஆனால் தம்பிக்கு திருமணம் ஆகவில்லை. திருமணமே வேண்டாம் என்று இருந்து விட்டான். அவர்கள் இருவருக்கும் நன்றாக விளையாடக் கூடிய நிலம் ஒன்று சொந்தமாக இருந்தது. அவர்களது தந்தை அவர்களுக்கென்று விட்டுப்போன சொத்து அந்த நிலம்.

அண்ணனும் தம்பியும் அந்த நிலத்தை இரு பிரிவாக பிரித்துக் கொண்டு விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். அடுத்தடுத்த தெருக்களில் இரு வீடுகளில் அவர்கள் தனித்தனியாக வாழ்ந்தார்கள். அண்ணன்காரன் கல்யாணமானவன். அவன் நினைப்பான் “எனக்கு மனைவி மக்கள் இருக்கிறாங்க. அதனால கடைசி காலத்தில் நம்மை காப்பாற்றுவதற்கு பிள்ளைங்க இருக்காங்க. முதுமையிலே நமக்கு பாதுகாப்பு உண்டு.

ஆனால், தம்பிக்கு யாருமே இல்லை. அதனால் அவன் தான் அதிகமாக பணம் சேர்க்கனும் அதுக்கு நாமதான் எப்படியாவது உதவி பண்ணனும்” என அண்ணன் தினமும் நினைப்பான். அதற்கு என்ன செய்யலாம் என யோசிப்பான்.

ஒரு நாள் இரவு ஒரு சாக்கு நிறைய நெல்லைக் கட்டி எடுத்து தலையில் சுமந்து கொண்டு தெருவில் இறங்கினான். இரகசியமாக தம்பியின் வீட்டுக்குப் பின்பக்கம் களஞ்சியத்தின் நெல்லைக் கொட்டிவிட்டு யாருக்கும் தெரியாமல் திரும்பி வந்து விட்டான்.

தம்பியிடம் அதை நேராக கொடுத்தான். அவன் வாங்க மாட்டான். அதனால் இப்படி இரகசியமாக இந்த வேலையை செய்து வந்தான். இந்த மாதிரி அடிக்கடி செய்வதை இவன் வழக்கமாக கொண்டிருந்தான்.

இந்த நேரம் தம்பிக்காரன் என்ன யோசனை பண்ணினான் தெரியுமா?

“நாமோ தனியாள். ஆனால் அண்ணன் குடும்பமோ பெரிது. அதனால் எனக்கு அதிகம் தேவையில்லை. அண் ணனுக்குத் தான் தேவை அதிகம். அவருக்கு நாமதான் ஏதாவது உதவி செய்யணும்” என்று நினைத்தான். அதனால் என்ன செய்வது நேரில் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டாரே.

ஆகவே இவனும் இரவோடு இரவாக நெல் மூட்டையை தலையில் சுமந்து கொண்டு புறப்பட்டான்.

யாருக்கும் தெரியாமல் அண்ணன் வீட்டுக்குப் போனான். அங்கே பின்புறம் இருந்த களஞ்சியத்தை கொட்டி விட்டு திரும்பி வந்துவிட்டான்.

இதேமாதிரி இவனும் அடிக்கடி செய்து கொண்டிருந்தான். அதாவதுஅண்ணன் நல்லாய் இருக்கணுமே என்று நினைத்து தம்பிக்காரன் கொண்டு வந்த தானியத்தை கொட்டுகிறான்.

தம்பி நல்லாய் இருக்கனுமே என்று நினைத்து அண்ணன் காரன் கொண்டு வந்து தானியத்தை கொட்டுகிறான். இது ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியாமல் நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு நாள் என்னவாயிற்று தெரியுமா?

நடுஇரவு அண்ணன்காரன் படுக்கையை விட்டு எழுந்தான்.

வழக்கம் போல் நெல் மூட்டையை தலையில் வைத்துக் கொண்டு தம்பி வீட்டுக்குப் போறான். அதேநேரம் தம்பியும் நெல் மூட்டையை தலையில் சுமந்து கொண்டு அண்ணன் வீட்டுக்குப் போறான். இரு தெருவும் சந்திக்கின்ற ஓர் இடத்திலே இருவரும் மோதிக்கொள்கிறார்கள். அப்போது தான் ஒருவர் முகம் ஒருவருக்கு தெரிகிறது.

“அடடே... தம்பி நீயா...?”

“ஆமாண்ணே... நீங்களா?”

நீண்ட காலம் இரகசியமாய் நடந்து கொண்டிருந்த இச் செயல் இப்போது வெளிச்சத்துக்கு வந்தது. இருவருமே நடந்த உண்மையைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் கண்கள் அன்பின் மிகுதியாய் கலங்கின. அவர்களின் பாசம் மிகுந்த கண்ணீர்த் துளிகள் நிலத்தில் விழுந்தன.

இந்த நிகழ்ச்சி நடந்து வெகுகாலம் கழித்து அந்த ஊரில் ஒரு கோயில் கட்ட வேண்டி இருந்தது. அதற்கு இடம் தேடினார்கள்.

எந்த இடத்தில் ஆலயம் எழுப்புவது? அதற்கு புனிதமான இடம் தேவைப்பட்டது. ஊர் பெரியவர்கள் கூடி என்ன செய்வது என்று ஆலோசனை நடத்தி இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அண்ணனும் தம்பியும் நடு இரவில் சந்தித்து கொண்டார்களே...

அவர்களின் கண்ணீர் நிலத்தில் விழுந்ததே அந்த இடம்தான் புனிதமான இடம் என்று முடிவு பண்ணினார்கள். அங்கே ஓர் அழகான ஆலயம் உருவாகிற்று.

சிறகை விரிக்க விரும்புவர்கள் இந்த கதையைக் கொஞ்சம் சிந்தித்து பார்க்க வேண்டும். இந்தக் காலத்தில் சகோதர பாசம் இப்படியா இருக்கிறது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## 11.2014 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1674 -ஆங்கிலேய-டச்சு போர்: வெஸ்ட்மின்ஸ்டர் உடனபாட்டின்படி புதிய நெதர்லாந்தை நெதர்லாந்து இங்கிலாந்திடம் ஒப்படைத்தது.

❖1918 - யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய நகரங்களில் இடம்பெற்ற உள்ளூர்க் கலவரங்களில் பல கடைகள் சூறையாடப்பட்டன.

❖1928 - ஹிரொஹீட்டோ ஜப்பானின் 124 ஆவது மன்னரானார்.

❖1970 - சோவியத்தின் லூனா 17 விண்கப்பல் சந்திரனுக்கு "லூனாகோட்" எனப்படும் தானியங்கி ஊர்தியைக் கொண்டு சென்றது.

❖1971 - கம்போடியாவில் கெமர் ரூச் படைகள் புனோம பென் நகரையும் விமான நிலையத்தையும் தாக்கி 44 பேரைக் கொன்று பல விமானங்களை அழித்தனர்.

❖1972 - பேர்மிங்ஹாமிலிருந்து புறப்பட்ட விமானம் கடத்தப்பட்டு ஹவானாவில் இறக்கப்பட்டது. கடத்தல்காரர்கள் கியூபாவில் கைது செய்யப்பட்டனர்.

❖1999 - பாகிஸ்தானில் தேசத் துரோகம் மற்றும் சதி செயல்களில் ஈடுபட்டதாக முன்னாள் பிரதமர் நவாஸ ஷெரீஃப்புக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

❖2008 - செவ்வாய்க் கோளில் தரையிறங்கிய ஐந்து மாதங்களில் பீனிக்ஸ் விண்கலத்துடனான தொடர்புகள் துண்டித்த நிலையில் இத்திட்டம் முடிவுக்கு வந்ததாக நாசா அறிவித்தது.

### பிறப்புகள்

❖1483 - மார்ட்டின் லூதர், கிறித்தவச் சீர்திருத்த இயகக் தலைவர் (இ. 1546)

❖1697 - வில்லியம் ஹோகார்த், ஆங்கிலேய ஓவியர் (இ. 1764)

❖1917 - சோ. தம்பிராஜா, இலங்கை அரசியல்வாதி

❖1934 - அ. துரைராஜா, பேராசிரியர், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் (பி. 1994)

❖1953 - எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைமை நீதிபதி (இ. 2014)

❖1957 - டக்ளஸ் தேவானந்தா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர்

❖1960 - நீல் கெய்மென், ஆங்கிலேய எழுத்தாளர்

### இறப்புகள்

❖461 - முதலாம் லியோ, திருத்தந்தை (பி. 400)

❖1549 - மூன்றாம் பவுல், திருத்தந்தை (பி. 1468)

❖1891 - ஆர்தர் ராம்போ, பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1854)

❖1938 - முஸ்தாஃபா கெமால் அத்தாதுர்க், துருக்கிய அரசியல்வாதி (பி. 1881)

❖1977 - தமிழ்வாணன் தமிழக எழுத்தாளர், இதழாசிரியர். (பி.1926)

❖1982 - லியோனிட் பிரெஷ்னெவ், சோவியத் யூனியன் தலைவர் (பி. 1906)

❖2006 - நடராஜா ரவிராஜ், ஈழத்தமிழ் அரசியல்வாதி (பி. 1962)




(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



120


...நீங்கள் கிரிக்கெட் விளையாடுவது பணத்திற்காகத்தானே என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டபோது, சச்சின் மனதுக்குள் கோபப்பட்டாலும் அதை வெளிக்காட்டாமல் அமைதியாக பதிலளித்தார். நான் கிரிக்கெட் விளையாடத் தொடங்கியபோது எனக்கு வயது 10. ஒரு பத்து வயதுச் சிறுவனுக்குக் கிரிக்கெட் விளையாட்டில்தான் ஆர்வம் இருக்குமே தவிர அவனுக்குப் பணம் காசு பற்றி எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இந்தியாவின் மூலை முடுக்கு, சந்து, பொந்துகளில் எல்லாம் சின்னஞ்சிறார்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும் காட்சியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்தச் சிறுவர்கள் எல்லாம் காசுக்காகவா விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சச்சின் எதிர் கேள்வி கேட்டவுடன் பாவம் அந்த நிருபர் வாயடைத்துப் போனார்.

- பேட்டிங் ஸ்டைல்:- வலது கை ஆட்டக்காரர்
- பௌலிங் ஸ்டைல்:- லெக் பிரேக் சுழற்பந்து வீச்சாளர்
- மட்டைஎடை:- 3பவுண்ட் 2அவுன்ஸ் அல்லது 1.42 கிலோ
- மறக்கமுடியாதது:- 1992 இல் உலகக்கோப்பை பாகிஸ்தான் வீழ்த்தியது.
- மோசமானது:-1992 ஆர். எஸ்.ஏ ஒருநாள் போட்டிகளில் தோற்றது
- ஹீரோக்கள்:- கவாஸ்கார், விவ் ரிச்சர்ட்ஸ், கபில், இம்ரான்கான், சந்திப்பாட்டீல்
- பிடித்தவர்கள்:-வினோத் காம்ப்ளி, லாரா, ரோட்ஸ்

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆக்ஷன் ஷூஸ் விளம்பரத்தில் நடித்த சச்சினுக்கு கிடைத்த ஊதியம் ஆண்டிற்கு ரூ. 2 லட்சம். ஆனால், இன்றைக்கு சச்சின் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு சம்பாதிக்கிறார் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் ரூ.150 கோடிகளுக்கும் அதிகம் என்கிறது விளம்பர நிறுவனங்கள் வட்டாரம். தற்போது சச்சின் வருமான விவகாரங்களை சச்சின் மனைவி அஞ்சலி, சகோதரர் அஜீத் மற்றும் மாமனார் ஆனந்த் மேத்தா ஆகியோர் கவனித்துக் கொள்கிறார்கள். குழந்தை நல மருத்துவரான அஞ்சலி தற்போது தனது டாக்டர் தொழிலை விட்டு விட்டு இப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விட்டார்.

சமீபத்தில் விஜய் நடித்த தமிழ்த் திரைப்படம் ஒன்றின் பெயர்கூட சச்சின்தான். இவரது பெயரை வைத்தால் சச்சின் ரசிகர்களை ஈர்க்கலாம் என்ற நம்பிக்கையால்கூட இப்படிப் பெயர் வைத்திருக்கலாம்.

## இந்தியாவின் பணக்கார விளையாட்டு வீரர்!



சச்சின் கார் பிரியரும்கூட. மும்பை-பூனே நெடுஞ்சாலையில் நூறு கிலோமீட்டர் வேகத்தில் காரை ஓட்டிக் கொண்டு செல்வது அலாதியான சுகம் தரும் என்பது சச்சினின் கருத்து. பென்ஸ் ஃபெராரி, பி.எம்.டபிள்யூ என உலகில் முன்னணி கார்கள் அனைத்துமே பிடிக்கும் என்றாலும் ரொம்பப் பிடித்தது ஃபெராரி 360 மொடேனா ஸ்பைடர் ரக கார்தான். இவை எல்லாம் ஒருபுறம் இருந்தாலும் லைசென்ஸ் வாங்குவதற்கு முன்பே 18 வயதில் வாங்கிய முதல் மாருதி மீது அலாதியான பாசம். குறிப்பாக சர்வதேச அளவில் நடைபெறும் 1 பார்முலா ரக கார் பந்தயங்கள் என்றால் சச்சினுக்கு உயிர். இவரது மனம் கவர்ந்த நாயகன் கார் ரேஸ் ஷூமேக்கர். உலக அளவில் கார் ரேஸ் பந்தயங்களில் புகழ்பெற்று வரும் தமிழகத்தைச் சேர்ந்த நரேன் கார்த்திகேயனும் தற்போது சச்சினின் நட்பு வளையத்திற்குள் வந்துள்ளார்.

ஃபெராரி ஃபார்முலா 1 ரக காரை என்றேனும் ஒரு நாள் ஓட்டிப் பார்க்க ஆசை என்பார் சச்சின். ஆனால், ஃபெராரி ஃபார்முலா 1 ரக காருக்குப் பதில் ஃபெராரி 360 மொடேனா ரன கார் ஒன்று அவருக்கு அந்நிறுவனத்தின் சார்பாகப் பரிசளிக்கப்பட்டது. பிராட்மெனுக்கு இணையாக 29 செஞ்சுரிகள் அடித்ததற்காக இத்தாலிய ஃபியட் நிறுவனம் சச்சினுக்கு இந்தக் காரை பரிசாக வழங்கியது. ரூ 75 லட்சம் மதிப்புள்ள இந்தக் காரின் மீது நிதி அமைச்சகம் ரூ 1.13 கோடி வரி விதித்தது. சச்சின் கார் மீதான 120% இறக்குமதி வரியை நீக்கச் சொல்லி விண்ணப்பிக்க அரசும வரியைத் தள்ளுபடி செய்தது. ஆனால், இந்த வரிச் சலுகை வழங்கப்படக் கூடாது என்று அப்போது பெரிய சர்ச்சையே எழுந்தது.

கே. ரமேஷ் (தொடரும்)

---

ஒரு சின்னக் கதை....

...ஒரு ஆளரவமற்ற தீவில் கைவிடப்பட்ட மூன்று பேர் அமர்ந்திருந்தனர். அவர்கள் எத்தனை வருடங்களாக அங்கே இருக்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. திடீரென்று அவர்கள் ஒரு பாட்டிலைக் கண்டெடுத்தனர். அவர்கள்

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

அதைக் கையால் தேய்த்த பொழுது திடீரென்று அவர்களுக்கு முன்னால் ஒரு பூதம் தோன்றியது. அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். பூதம் அவர்களிடம், எனக்கு இந்த பாட்டிலிலிருந்து விடுதலை கொடுத்ததற்கு நன்றி. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆசையைக் கேட்கலாம். நான் நிறைவேற்றுகிறேன் என்று சொன்னது. அவர்கள் பரபரப்படைந்து, சிறிது நேரம் சிந்தித்தனர். முதலாமவன் சொன்னான், நான் என்னுடைய காதலியை மணந்து சந்தோஷமாக வாழ விரும்புகிறேன். பூதம் சொன்னது, சரி, உன் ஆசை நிறைவேறும். முதலாமவன் அந்தத் தீவிலிருந்து காணாமல் போய் விட்டான். பூதம் இரண்டாமவனைப் பார்த்தது. இரண்டாமவன் சொன்னான், நான் ஒரு பணக்கார தொழிலதிபராக விரும்புகிறேன். பூதம் சொன்னது, சரி உன் ஆசை நிறைவேறும். இரண்டாமவன் மறைந்தான். பூதம் மூன்றாமவனைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டது. மூன்றாமவன் சொன்னான், என்னுடன் இத்



தகை வருடங்கள[illegible] இருந்த [illegible] இரு நண்பர்களை[illegible] இழக்கப் [illegible]றேன். நான் அவர்களுடன் இருக்க ஆசைப்படுகிறேன். பூதம் சரி என்று சொல்லிவிட்டு, அவர்கள் மூவரையும் பழையபடி அந்த ஆளரவமற்ற தீவில் [illegible]விட்டு, மறைந்துவிட்டது.

நாம் நமது கவலைகளின் மீது மிகவும் பாசத்துடன் இருக்கிறோம்! அவைகள் நமக்குத் துன்பத்தைத் தருகிறது என்று சொல்கிறோம். ஆனால், அவைகளின் மீது மிகவும் பற்றுடன் இருக்கிறோம். நீங்கள் உங்கள் கவலைகளைக் காதலிக்கிறீர்கள் என்று சொன்னால், நம்பத் தயாராக இருக்க மாட்டீர்கள். ஆனால் அதுதான் உண்மை.

மக்கள் என்னிடம் சொல்கிறார்

### ஆன்மீகம் 70

கள், என் வியாபாரம் மோசமான நிலையிலிருந்து மிகவும் மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. ஸ்வாமிஜி! சென்ற மாதம் எனக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அடுத்த மாதம் அது இன்னும் மோசமாகிவிடும் என்று. நாநன் சொல்கிறேன், அது தெரியுமென்றால் நீங்கள் ஏன் உங்கள் வியாபாரத்தை உடனே இழுத்து மூடிவிடக் கூடாது? ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? ஆனால், அவர்கள் அதி ர்ச்சியடைகிறார்கள். அவர்கள் நம்பிக்கையின்றிக் கேட்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள், ஸ்வாமிஜி? பிறகு நான் என்ன செய்வது?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

...தனித்துவமான அரும் பொருட்கள், வீட்டு அலங்காரம், ஆடை அலங்காரம், நூல் அலங்கார வேலை, பெறுமதிவாய்ந்த உலோகப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உற்பத்திகள், மட்பாண்டப் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறிய கைவினைஞர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டங்களை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வீட்டுத் தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக தளபாடங்களின் இறக்குமதி மீதான மட்டுப்பாடு உள்நாட்டு தளபாடக் கைத்தொழிலினை ஊக்குவிக்கும் வகையில் கடுமையாக பின்பற்றப்படும்.

ஹோட்டல் மற்றும் ஆதன அபிவிருத்தியாளர்கள் அவர்களது முதலீட்டிற்கான அங்கீகாரம் வழங்குவதற்கான நிபந்தனையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தளபாடங்களை முடியுமானளவு அதிகமாக பயன்படுத்துமாறு வேண்டப்படுவர்.

**இரத்தினக்கல் மற்றும் ஆபர ணக் கைத்தொழில்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, ஆபரண ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக 50 சதவீத தீர்வை விலக்களிப்பாக ஏற்றுமதி நோக்கத்திற்காக வெளிநாட்டு செலாவணியினை பயன்படுத்தி ஏறறுமதியாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் மீதான தீர்வையினை 3.5 சதவீதமாக குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் விதிக்கப்படும் சேவைக் கட்டணத்தினை ஏற்றுமதி பெறுமதியில் 0.25 சதவீதமாக குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இக்கைத்தொழிலுக்கு புதிய பரிணாமமொன்றினை வழங்கும் வகையில் மாகம்புர றுகுணு அபிவிருத்திக்கு சர்வதேச கவர்ச்சியினை வழங்கும் வகையில் இரத்தினக்கல, ஆபரண தயாரிப்பு வலையமொன்றினையும் இரத்தினபுரியில் இரத்தினக்கல் விற்பனை நிலையமொன்றினையும் உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**கைத்தொழில் மயமாக்கலின புதிய அலை**

கௌரவ சபாநாயகர் அவர்களே, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போட்டிக் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் 300 தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

3 வருட காலப்பகுதிக்கு அரைவாசி வரி விடுமுறை மற்றும் பங்கிலாப வரியிலிருந்து விலக்களிப்பு என்பவற்றிற்கு மேலதிகமாக பொறிதொகுதி மற்றும் இயந்திர இறக்குமதிக்கான தேய்வு பெறுமானத்தினை மொத்தமாக கொடுப்பனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

கைத்தறி தொழில்துறை உலக சந்தைக்கான வழங்கலினை மேற்கொள்ளும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தறி தொழிலாளர்களுக்கு நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ரூபா 500 மில்லியனுக்கு அதிகமான புதிய முதலீடுகளில் ஈடுபட்டுள்ள முதலீட்டாளர்களுக்கு 7 வருடங்களுக்கு அரைவாசி வரி விடுமுறை வழங்கப்படுவதுடன் அத்தகைய முதலீடுகள் 2015 முடிவடைவதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**முன்னோடி தொழில் முயற்சிகளுக்கான அங்கீகாரம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, 1977 இல் திறந்த பொருளாதாரத்திற்கு முன்னர் இலங்கையில் கைத்தொழில்களை ஆரம்பித்த தொழில் முயற்சியாளர்கள் இறக்குமதிப் போட்டியுடன் அவர்களது ஆற்றல்களை நிலையாக பேணியதுடன் ஏற்றுமதிச் சந்தைகளிலும் சிறந்த செயலாற்றுகையினைக் காட்டியுள்ளனர்.

எனவே, அத்தகைய தொழில் முயற்சிகள் செலுத்த வேண்டிய வருமான வரியில் 10 சதவீத கழிப்பனவு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பாரிய கொழும்பு பிரதேசத்தில் சுற்றாடல் மற்றும் கழிவு முகாமைத்துவம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, பாரிய கொழும்பு பிரதேசத்தில் உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் சுற்றாடல் அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக வேரஸ் கங்கை, களு ஓயா, பேரவாவி மற்றும் ஹமில்டன் கால்வாய் என்பவற்றின் அபிவிருத்தியினை துரிதப்படுத்துவதற்காக காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பாரிய கொழும்பு பிரதேசத்தின் திண்ம கழிவு முகாமைத்துவமும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயம் என்பதனால் துப்பரவேற்பாடு மற்றும் சுகாதார வாழ்க்கைச் சூழலினை உறுதிப்படுத்தும் வகையில் ஏனைய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினுடன் சம்பந்தப்பட்ட ஏனைய அமுல்படுத்துகை நிறுவனங்களுக்கும் 2015 - 17 காலப்பகுதியில் ரூபா 10,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.


**நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, கண்டி, பதுளை, குருநாகல், காலி, இரத்தினபுரி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய நகர அபிவிருத்திகளுடன் இணைக்கும் வகையில் நகர அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி சார்ந்த சமுதாய வசதிகள் மற்றும் நவீன நகர வாராந்த சந்தைகளின் அபிவிருத்தி என்பவற்றிற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

2014 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு முறையான வீட்டு வசதியற்ற மற்றும் சுகாதார சீர்கேடான சூழலில் வாழ்கின்ற கொழும்பு நகரத்திலுள்ள ஏறக்குறைய 50,000 குடும்பங்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தி முன்னெடுப்பானது ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய வீடமைப்பு திட்டங்கள் 2015 இல் நிறைவு செய்யப்படுவதுடன் சேரிப்புறங்களில் வசிப்பவர்களுக்கு வாழ்வதற்கான வசதிகளுடன் கூடிய சிறந்த வீடுகள் வழங்கப்படும்.

சொய்சாபுர, எல்விட்டிகல, என்டர்ஸ்சன் வீடமைப்பு தொகுதிகள், ஜயவட்டனகம, மத்தேகொட, அந்தராவத்தை உள்ளடங்கலான வீடமைப்பு திட்டங்களின் அபிவிருத்தியினை துரிதப்படுத்துவதற்காகவும் 2012 வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஏனைய 34 வீடமைப்பு திட்டங்களையும் தற்பொழுதிருக்கும் வீடமைப்பு திட்டங்களை நவீனமயப்படுத்துவதற்காகவும் ஒதுக்கீட்டினை ரூபா 750 மில்லியனாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன.

குறை வருமானம் பெறுநர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை இரட்டிப்பாக்கும் வகையில் மேலும் ரூபா 750 மில்லியனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.



**பெருந்தோட்ட சமுதாய வீடமைப்பு மற்றும் துப்பரவேற்பாடு**

கௌரவ சபாநாயகர் அவர்களே, அடுத்த மூன்று வருடங்களில் பெருந்தோட்டத் துறையில் தற்பொழுது காணப்படும் தரம் குறைந்த வீடுகளுக்கு மாற்றீடாக 50,000 வீட்டு தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது காணப்படும் வீடுகளை துப்பரவேற்பாடு மற்றும் மலசலகூட வசதிகளுடன் மேம்படுத்துவதற்காக பெருந்தோட்ட நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 2,000 மில்லியனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வீட்டு உரிமையாளர் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் இணைந்து அபிவிருத்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு மேலும் ரூபா 750 மில்லியனை வீடமைப்பு கடன் திட்டத்திற்காக வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**சமூகப் பாதுகாப்பு**

2015 ஜனவரியிலிருந்து முதியோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவினை ரூபா 1,000 இலிருந்து ரூபா 2,000 ஆக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

முதியோர் தமது காலத்தினை தினசரி நிலையங்களில் தொலைக்காட்சி, வாசிப்பு மற்றும் ஏனைய வசதிகளுடன் களிப்பதற்கான சூழலினை உருவாக்குவதற்காக அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முதியோர் கழகங்கள் உருவாக்கப்படும்.

இந்நிலையங்களில் மருத்துவ சிகிச்சைகள் ஏற்பாடு செய்யப்படும். முதியோருக்கான ஆரம்ப சுகாதார பராமரிப்பு அதேபோன்று கண் பராமரிப்பு என்பவற்றிற்கான துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

எமது சமூகத்தில் முதியோர் பராமரிப்பினை ஊக்குவிக்கக் கூடிய சிறந்த சமூக சேவை நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன.

சாலியபுர, கதிர்காமம், மீரிகம மற்றும் யாழ்ப்பாணம் முதியோர் இல்லங்களை புனரமைப்பதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

முதியோர் தொடர்பான பாரம்பரிய குடும்ப ஒழுக்க பெறுமானமிக்க கதைகளை வெளிக்கொணருவதற்கு திரைப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கு ரூபா 100 மில்லியனை நிதி உதவியாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மாற்றுத் திறனாளிகள் அனைவருககும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 3,000 ரூபாவினையும், பாடசாலைகளுக்குச் செல்லும் அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கான மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவாக 750 ரூபாவினையும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

நாடு முழுவதிலுமுள்ள தொழிற் பயிற்சி கல்லூரிகளை அத்தகைய வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன்.

இந்த பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு புகையிரத ஆணைச் சீட்டுக்கள், பண்டிகை முற்பணங்கள், அக்ரஹார காப்புறுதி நன்மைகள் ஆகியவற்றினையும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு**

கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை மகளிர் பணியகம், சிறுவர பாதுகாப்பு அதிகார சபை மற்றும் இலங்கை பொலிஸ் என்பவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாட்டினால் சிறுவர் துஷபிரயோகமும் பெண்களுக்கெதிரான வன்முறையும் நியாயமானளவு குறைந்துள்ளது.

பெற்றார் - ஆசிரியர் சங்கங்கள், திவிநெகும சமுதாய அடிப்படை நிறுவனங்கள் மற்றும் இளைப்பாறிய அரசாங்க ஊழியர்களை குடும்ப ஆலோசனை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை விரிவாக்குவதற்கும் பிரதேச செயலகங்களிலுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களை வலுப்படுத்துவதற்கும் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**விளையாட்டுத்துறை**

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு பல்தரப்பட்ட விளையாட்டுக்களைக் கொண்ட சர்வதேச நிகழ்வொன்றான மூன்றாவது ஆசிய இளைஞர் விளையாட்டினை நடாத்துவதற்கான சந்தர்ப்பத்தினை பெற்றுள்ளது. இந்த சர்வதேச நிகழ்வுக்காக இலங்கையின் அனைத்து மூலை முடுக்குகளிலிருந்தும் குறிப்பாக கிராமிய பாடசாலைகளிலிருந்து எமது இளைஞர்களை ஒன்று சேர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டும்.

எனவே, எமது இளைஞர்களை பல்தரப்பட்ட ஆற்றலுடையவர்களாக விருத்தி செய்வதுடன் அடுத்த வருடத்திலிருந்து பாடசாலை மட்டத்தில் பல்தரப்பட்ட விளையாட்டுக்களையும அறிமுகப்படுத்துவதற்கு இது சிறந்ததொரு பின்புலமாக அமையும்.


எனவே, அடுத்த வருடத்திலிருந்து விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத சகல பாடசாலைகளுக்கும் விளையாட்டு திணைக்களத்திலிருந்து பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்காக ரூபா 750 மில்லியனை நான் ஒதுக்கீடு செய்துள்ளேன்.

எமது பாடசாலை மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் நாட்டில் ஏற்கனவே காணப்படுகின்ற விளையாட்டு தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தும் வகையில் அவற்றினை தயார்படுத்துவதற்கும் சுகததாச மற்றும் கெத்தாராமை விளையாட்டரங்குகளை புனரமைத்தல், கொழும்பில் இது தொடர்பான ஏனைய வசதிகளை அதிகரித்தல் என்பவற்றிற்கு நிதி உதவி வழங்குவதற்காக ரூபா 2,250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நடராஜா ரவிராஜ் தமிழ் மக்களின் உரிமைக்காக துணிச்சலுடன் குரல் கொடுத்தவர்



**அமரர் நடராஜா ரவிராஜ் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

யாழ்.சாவகச்சேரியில் 1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25ஆம் திகதி நடராஜா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் அமரர் ரவிராஜ். இவர் தமது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்து சட்டக் கல்லூரியிலும் இணைந்து 25 ஆவது வயதில் சட்டத்தரணியாகத் திகழ்ந்தார். கொழும்பு நகரில் தமது பேச்சுத் திறனாலும் வாதத்திறனாலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பெரும் அன்பையும் ஆதரவையும் பெற்றார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக இலவசமாக ஆஜராகி விடுதலை பெற்றுக்கொடுத்தார். யாழ். மாநகரசபை முதல்வர்களான பொன். சிவபாலன், திருமதி யோகேஸ்வரன் சரோஜினிதேவி போன்றோரின் மரணத்திற்குப்பின்பு அமரர் ரவிராஜை முதல்வராக்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர் என்பதால் கூட்டணியின் தலைமை அவரை நாடியது.

அரசியல் பிரவேசத்தை விரும்பாத அவரது தாயார் போகவேண்டாம் என்று கூறி வாசற்படியில் கால்களை நீட்டி அமர்ந்திருந்தார். தமிழ்மக்களின் விடிவுக்காகவும் கூட்டணித் தலைமையின் அழைப்பை மறுக்க முடியாமலும் தாயாரின் கால்களை கடந்து சென்றார். அமோக ஆதரவுடன் மாநகரமுதல்வரானார்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்ட வேட்பாளராக கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றியுடன் பாராளுமன்ற உறுப்பினரானார். தமிழரின் உரிமைக்காக துணிச்சலுடன் பாராளுமன்றில் வாதாடினார்.

**ஒருதடவை நாடாளுமன்றத்தில் உணர்ச்சிவசப்பட்டு பேசி அமர்ந்திருந்த போது அமைச்சர் விமல் வீரவன்ச அமரர் ரவிராஜைப் பார்த்து கொலைப்பட்டியலில் நீர்தான் முதலாமிடத்தில் இருக்கிறீர் என்றார். அப்போது அமரர் ரவிராஜ் சிரித்தார். ஏன் சிரிக்கிறீர் என விமல் வீரவன்ச வினவ அதற்கு அமரர் ரவிராஜ் நான் பாடசாலையில் ஒருபோதும் முதலாம் பிள்ளையாய் வரவில்லை கொலைப் பட்டியலில் முதலாமிடத்தில் இருப்பதனால் சிரிக்கிறேன் என்றார்.**

யாழ்.மாவட்டத்திலுள்ள பல தொகுதிகளில் அவருக்கு அதிக ஆதரவு கிடைத்தது. தமது ஆதரவாளர்கள் ஊடாகப் பின்தங்கிய கிராமங்களுக்கு அபிவிருத்தி செய்வதிலும் மக்களின் முன்னேற்றத்துக்காக உழைப்பதிலும் ஆர்வம் காட்டினார். கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கூடியவராக இருந்தமையால் மாணவரின் கல்வி வளர்ச்சியிலும் பின்தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் அதிக அக்கறை காட்டினார்.

மேலும் அதிக பாடசாலைகளுக்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் வருடாந்தம் நிதியொதுக்கி வைத்தார். அத்துடன் பெரும்பாலான பாடசாலை விழாக்களில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதனால் மாணவர்கள், பெற்றோர்கள் இன்னும் அவரது சேவையை நினைவுகூர்வதை பார்க்கக்கூடியதாகவுள்ளது.

அவரது காலத்தில் பாரிய ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. எமது தமிழ்த் தலைவர்கள் சர்வதேசத்திற்கு எமது போராட்டம் பற்றி தெரியப்படுத்திக் கொண்டிருந்தனர். அந்தவேளையில் எமது நாட்டிலுள்ள பின்தங்கிய கிராமப்புற சிங்கள மக்களுக்கு போராட்டம் பற்றி தெரியாதிருந்ததை அறிந்த அமரர் ரவிராஜ் சிங்கள மொழி தொலைக்காட்சி சேவை ஒன்றினூடாக வாரந்தோறும் விளக்கம் கொடுத்து வந்தார்.

அப்படி ஒரு தடவை சிங்களமொழி தொலைக்காட்சி சேவைக்கு பேட்டி கொடுத்துவிட்டு 3 மணிநேரத்தில் அவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானார். இறப்பதற்கு முதல்நாள்மாலையும் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டம் மனோ கணேசனுடன் இணைந்து நடத்திய போது கொல்லாதே கொல்லாதே தமிழர்களைக் கொல்லாதே என்ற அமரரின் குரல் இன்றும் எங்கள் செவிகளில் கேட்கின்றது.

வேகமான எங்களின் இதயத்தில் குடிகொண்டவர் அமரர் ரவிராஜ். அதேபோல் வேகமாக எங்களிடமிருந்து பிரிக்கப்பட்டார். அவர் பிரிந்து இன்று எட்டு ஆண்டுகள் ஆகின்றன. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அவரின் நினைவுகள் எம்மைவிட்டு பிரியமாட்டாது.

**க.சுப்பிரமணியம்**
**உப தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**உயரப்புலம், ஆனைக்கோட்டை.**











யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா-2014 நேற்று முன்தினம் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற போது ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குளத்தின் நீரை விவசாய நடவடிக்கைக்கு திறந்து விடுங்கள்

## கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கோரிக்கை

(மருதநகர்)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு இம்முறை போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறாமையால் இரணைமடு குளத்தின் நீரை திறந்து விடுமாறு நீர்ப்பாசன திணைக்களத்திடம் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது பெய்துள்ள மழை பெரும்போக நெற் செய்கை செய்வதற்கு போதுமானதாக இல்லை.

இந்நீரின் அளவினை கொண்டு வயல் நிலங்களுக்கு பசளையிடுவதற்கும் கிருமிநாசினிகளை தெளிப்பதற்கும் போதாதுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது நடைபெறும் பெரும்போக நெற்செய்கைக்கு இதுவரை இரணைமடு குளத்தின் நீர் திறந்து விடப்படவில்லையென விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பெய்துள்ள மழையினை அடுத்து இரணைமடு குளத்தின் நீர் கொள்ளளவு 16 கன அடியாகவே காணப்படுகிறது.

இந்நீரானது பெரும்போக விவசாய நீர்ப்பாசன நடவடிக்கைக்கு பற்றாக்குறையாகவுள்ளது.

கடந்த சில நாட்களாக பனி மூட்டம் அதிகமாக காணப்படுவதால் பல்வேறு பீடை தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக விவசாயிகளால் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இம்முறை கிளிநொச்சி கமநல சேவை திணைக்களத்தினர் காலம் தாழ்த்தியே அடிக்கட்டு பசளையினை விவசாயிகளுக்கு விநியோகித்தனர். இதனால் விவசாயிகள் தமக்கான பசளை வகைகளை பெரும் தொகை பணம் செலவு செய்து தனியார் கடைகளில் நிலங்களுக்கு பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இன்னும் கமநலசேவை திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரவகைகள் பங்கீடு செய்யும் நடவடிக்கை நிறைவுபெறவில்லை என கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் காலம் தாழ்த்தி உரவகையினை விளை நிலங்களுக்கு இடுவதால் விளைச்சல் குறைவாகவே கிடைக்குமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே காலம் தாழ்த்தாது இரணைமடுகுளத்தின் நீரை திறந்து விடுமாறு விவசாயிகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கின்றனர். (2-285)




## மீட்கப்பட்ட குண்டு செயலிழப்பு

(குருமன்காடு)

வீடொன்றின் வளவிலிருந்து குண்டு மீட்கப்பட்டு செயலிழக்கப் பட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வவுனியா பட்டைக்காட்டு பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா பட்டைக்காடு பகுதியில் அமைந்துள்ள அபிவிருத்தி சங்க வீதியிலுள்ள வீடொன்றில் இருந்தே இக் குண்டு கண்டெடுக்கப்பட்டது.

குறித்த வீட்டில் வாடகைக்கு இருப்பவர்கள் வீட்டு வளவினை துப்புரவு செய்த போது இக் குண்டு இருப்பதனை அவதானித்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப் படையினரால் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (2-250)

# குப்பைகள் அகற்றப்படாமையால் தொற்றுநோய் பரவும் அபாயம்

## சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? மக்கள் கேள்வி

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் கிளி/விவேகானந்தா வித்தியாலயத்திற்கு மிக அருகாமையில் காணப்படும் வீதியில் குப்பை போடுவதால் அவ்விடம் சுகாதார சீர்கேடாக மாறிவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் நீண்டகாலமாக பள்ளம் ஒன்று இருந்து வருகிறது.

இப்பள்ளத்தை மண்போட்டு சீர் செய்து தருமாறு கிராம அமைப்புகளிடம் மக்கள் பல தடவைகள் முறையிட்டும் அதற்கான எந்தவித நடவக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது இந்த வீதிக்கு நடுவில் காணப்படும் பள்ளத்தில் நாளாந்தம் இரவு வேளைகளில் குப்பைகள் கொட்டப்படுவதால் அவ்வழியூடாக பயணிப்போர் பெரும் சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குப்பை கொட்டப்படும் இடத்திற்கு மிக அருகில் கிளி/விவேகானந்தாவித்தியாலயம் அமைந்துள்ளது. இப் பாடசாலைக்கு இப் பாதை வழியாகவே சுமார் எழுநூறு மாணவர்கள் தினமும் பயணித்து வருகின்றனர்.



தமது தேவைகளின் நிமிர்த்தம் பொதுமக்கள், விவசாயிகள், கனரக வாகனங்கள் என்பன பயணித்து வருகின்றன.

தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் இங்கு போடப்படும் கோம்பைகளினுள் மழை நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்றதாக அமைந்துள்ளதாக அப்பகுதி மக்களால் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குப்பைகளில் இருந்து தினமும் அதிகளவான இலையான், கொசுகள் பெருகுவதால் தொற்று நோய் பரவும் அபாயமும் தென்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் குப்பை அகற்றப்படாமையால் தற்போது புழுக்கள் நிறைந்து காணப்படுகிறது. அயலிலுள்ள பாடசாலைக்கு இலையான்கள் மூலம் இவை காவப்பட்டு மாணவர்களுக்கு தயாரிக்கும் உணவுகளில் அவை அமர்வதால் நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ் விடத்தில் கொட்டப்படும் குப்பையை கிராம அலுவலரோ, கிராம அபிவிருத்தி சங்கத்தினரோ, சுகாதார பரிசோதரோ நிறுத்துவதற்கு ஏன் முன்வரவில்லையென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடத்தில் குப்பை போடாதவாறு தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-271)

# குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மாகாண சபை உறுப்பினரால் உதவி வழங்கல்



நான்கு குடும்பங்களுக்கான ஒரு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் அண்மையில் முள்ளியவளையில் வழங்கப்பட்டுள்ளது. கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுபபினர் ரவிகரனினால் மேற்படி உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் தெரியவருவதாவது, வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் பன் முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலமாக வாழ்வாதார உதவிகளை வழங்கும் நிகழ்வின் முதற் கட்டம் முள்ளியவளையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் கணவனை இழந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நான்கு குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை கால்நடை அபிவிருத்தி உத்தியோகததர் வே.இரத்தினசபாபதி மற்றும் கரைதுறைப்பற்று கால்நடை வைத்தியர் எஸ்.நிகேதினி முன்னிலையில் வழங்கப்பட்டிருந்தது.

இரு குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பிற்கான வாழ்வாதார உதவிகளும் மற்றைய இரு குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்பிற்கான வாழ்வாதார உதவிகளும வழங்கப்பட்டு இதனூடாக குடும்ப வாழ்வாதாரத்தை பெருக்குவது தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (2-250)

# கடற்பாசி உற்பத்தியை ஊக்குவிக்க ஐம்பது குடும்பங்களுக்கு உதவிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்பாசி உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் மூலம் 50 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதோடு இன்னும் 300 குடும்பங்களை இணைத்து செயற்படுத்த வேண்டுமென்பதே இலக்காகவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர் வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டம் ஆரம்பமாகியது. தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கடற்பாசி வர்த்தக ரீதியான ஏற்றுமதி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடற்பாசி உற்பத்தியை [illegible] குடும்பங்கள் தங்கள் வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றன. இந்த கடற்பாசி வளர்க்கும் தொழில் நடவடிக்கையில் 300 குடும்பங்களை இணைக்க வேண்டும் என்பதே எமது இலக்காக உள்ளது.

இந்த தொழிலை மீனவர்களே அதிகளவில் மேற்கொள்கின்றனர். ஒரு நாளில் மீன்பிடிக்கு செல்லும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் 2 அல்லது 3 மணித்தியாலங்கள் இந்த தொழிலுக்கு செலவிட்டால் போதுமானது.

அந்த குடும்பங்களின் பெண்களும் இத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இது அவர்களின் மீன்பிடி தொழில் வருமானத்தைவிட மேலதிக வருமானத்தை ஈட்டி தரக்கூடிய தொழிலாக இருக்கின்றது.

இந்த தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் செயற்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் மூலம் 50 குடும்பங்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த கடற்பாசியால் பல குடும்பங்கள் பயன்பெறுவதுடன் கடலில் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் முடிகின்றது.

இந்த உற்பத்தி யாழ்.மாவட்டத்தின் நயினாதீவு, சாட்டி, மாதகல் ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கு கடற்பாசி வளர்ப்பதற்குரிய சூழல் காணப்படுகின்றது.

மன்னார் முதல் ஊர்காவற்றுறை வரையான கடற்பகுதி அலைகள் குறைவாக உள்ளதால், நீர்வாழ் உயிரினங்களின் வளர்ப்பு அங்கு சாத்தியமாகின்றது. கடற்பாசிகள் வளர்க்கும் போது, கடலில் கூடுகள கட்டி அதனுள் கடற்பாசிகளை வளர்க்க முடியும். இதனை கடலிலே விட்டால் மீனினங்களின் பெருக்கங்கள் அதிகரிக்கும். அத்துடன் உரிய காலங்களில் அவற்றை அறுவடை செய்து வர்த்தக ரீதியில் ஏற்றுமதியும் செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீக்காயங்களுடன் பெண்ணின் சடலம் வடமராட்சிப் பகுதியில் நேற்று மீட்பு

யாழ். வடமராட்சிப் பகுதியில் தீக்காயங்களு டன் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை விஸ்வகுல வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த லோகிதாஸன் அம்பிகாதேவி (வயது 52) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


தனது வீட்டில் பெற்றோருடன் வசித்து வந்த குறித்த பெண் நேற்றைய தினம் வீட்டில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பெண்ணின் தந்தை பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார்.

மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வசித்து வந்த குறித்த பெண் தனக்குத் தானே தீ மூட்டி எரித்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட பெண்ணின் சடலத்தினை பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி.அன்ரலா ஷன்சன் தயான் நேரில் சென்று பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-19-60)




## திருக்குடமுழுக்கு பெருவிழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கோயில் கொண்டருளும் ஸ்ரீ யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வரர் சுவாமியின் திருக்குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.35 இற்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட சுபமுகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி கோவில் மூர்த்தங்களுக்கான எண்ணெய்க் காப்பு நிகழ்வு 12 ஆம் திகதி புதன்கிழமை பகல் 11 மணி முதல் மாலை 3 மணி வரை இடம்பெறும். கும்பாபிஷேகக் கிரியைகளை தென்கோவை கற்பக விநாயகர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (இ




# திட்டமிட்டபடி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார பணிமனையினால் 29 ஐஸ் கிறீம், யூஸ் உற்பத்தி நிறுவனங்களுக்கு மீளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனயாழ்.வணிகர் கழகம் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது எனவும் இன்று எம்மால் மேற்கொள்ளப்படவுள்ள ஆர்ப்பாட்ட பேரணியினை குழப்புவதற்காகவே வணிகர் கழகம் இவ் அறிவித்தலினை விடுத்துள்ளது என குற்றசாட்டியுள்ள யாழ்.மாவட்ட உப உணவு மற்றும் குளிர்பான உற்பத்தியாளர் சங்கம் ஏற்கனவே திட்டமிட்டபடி எமது ஆர்ப்பாட்ட பேரணி இன்றய தினம் நடைபெறும் எனவும் சங்கத்தின் தலைவர் எம்.உதயசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் மீளவும் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.வணிகர் கழகத்தினரால் வெளியிடப்பட்ட 29 நிறுவனங்களின் பெயர் பட்டியல் அவசரகதியில் தயாரிக்கப்பட்டு எமது நாளைய ஆர்ப்பாட்ட பேரணியை திசை திருப்பும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த 29 நிறுவனங்களில் பெரும்பாலானவை முன்னர் இயங்கி வந்த நிறுவனங்களும் அதன் கிளைநிறுவனங்களும் ஆகும்.

மற்றைய நிறுவனங்களில் பெரும்பாலானவை கூல்பார் அதாவது எமது உற்பத்திநிறுவனங்களில்உற்பத்திசெய்யப்படும் ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்திப் பொருட்களை எடுத்து வியாபாரம் செய்யும் நிறுவனங்களாகும்.

இவை உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடாத நிறுவனங்கள் ஆகும். அனுமதிக்கப்பட்ட சில நிறுவனங்கள் ஆய்வுக்குட்படுத்தாது, உற்பத்திகளை நிறுத்தாது, தொடர்ந்து இயங்கி வரும் நிறுவனங்களாகும்.

பாதிக்கப்பட்ட நிறுவனங்களில் சில நிறுவனங்கள் எமது சங்கத்துடன் இணையாது சுயாதீனமாக சிலரை திருப்திப்படுத்தி தமது உற்பத்தி நிறுவனங்களை திறக்க முனைவதாக அறிகின்றோம். எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு நிறுவனங்களுக்கும் இது வரை அனுமதி வழங்கப்படவில்லை.

இதை நாம் ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகவே கருதுகின்றோம். எனவே நாம் திட்டமிட்டபடி நாளைய தினம் எமது ஆர் ப்பாட்ட பேரணியை நடத்தவுள்ளோம்.

எமது சங்கத்திற்குட்பட்ட சகல நிறு வனங்களும் அங்கு வேலை செய் யும் ஊழியர்களும் எமது நிறுவனங்களின் உற்பத்திகளை எடுத்து விநியோகம் செய்யும் விநியோகஸ்தர்களும் மற்றும் சமூகநல ஆர்வலர்களும் மற்றும் பொது அமைப்புக்களும் இவ்வார்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்ளவேண்டும் என்று எமது சங்கத்தின் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தார். (இ-4)

## வாழும் கலைப்பயிற்சி

தென்மராட்சி வாழும் கலை ஊடாக மன அழுத்தம்,உடல் உபாதைகள் என்பவற்றை நீக்கி உடல் உள ஆன்மீக மேம்பாட்டைத் தரவல்ல பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட வாழும் கலைப்பயிற்சி I மட்டுவில் சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியானது தொடர்ந்து 6 நாட்கள் மாலை வேளைகளில் நடைபெறவுள்ளது.எனவே ஆர்வலர்கள் கலந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் வாழும் கலை அமைப்பு அறிவித்துள்ளது. (இ-7)


## நாவலர் விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கவுள்ள நாவலர் விழா எதிர்வரும் டிசெம்பர் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி யாழ்.பல்கலைக்கழக நடனத்துறையினர் நாவலரின் வாழ்வியலைச் சித்திரிக்கும் வகையில் நாட்டிய நாடகம் ஒன்றைத் தயாரிக்கத் தொடங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்வு யாழ்.கரிகணன் நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் பொலிஸாரிடம் வசமாக மாட்டினார்



(கரணவாய்)

யாழ். வடமராட்சிப் பகுதியில் பெண்ணொருவரை வைத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவரை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

நெல்லியடிப் பிரதேசத்தில் கரவெட்டி மத்தியில் வசிக்கும் மேற்படி நபர் அதேயிடத்தைச் சேர்ந்த பெண்ணொரு வரை இணைத்து தொடர்ச்சியான கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பான இரகசிய தகவல் ஒன்று நெல்லியடிப் பொலிஸாருக்கு கடந்த சில நாட்களுக்கு முன் கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து குறித்த பகுதியை சுற்றி வளைத்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது அந்நபர் மற்றும் அப் பெண் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றமை தெரிய வந்தது.

இதற்கமைய நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார் அவ்விருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டனர்.

இதன் போது அப் பெண் திருமணமாகி கணவனை பிரிந்த நிலையில் வசித்து வருகின்றார் எனவும் அந்நபர் கசிப்பு உற்பத்தியின் பிரதான குற்றவாளி என்றும் பொலிஸாருக்கு தெரிய வந்தது.

அத்துடன் கசிப்பு பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது எனவும் இவ் வியாபாரத்தில் பல நபர்கள் தொடர்புடையவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.


இதற்கமைய மேற்படி பெண் மீது பொலிஸார் குற்றத்தினை பதிவு செய்தவுடன் நபரினையும் கசிப்பு உற்பத்திக்கு பயன் படுத்திய பிளாஸ்ரிக் கொள்கலன்கள் என பல்வேறுபட்ட பொருட்களையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

தற்போது நெல்லியடி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள அந்நபரிடம் விசாரணைகள் மேற்கொண்டு இவற்றுடன் தொடர்புடைய நபர்களையும் கைதுசெய்யவுள்ளோம் என நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-7-60)

# மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்கள்

## இணைந்து வழங்கிய யாழ்.இளைஞர்கள்



(யாழ்ப்பாணம்)

பதுளை கொஸ்லாந்தை மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென யாழ்.மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமும் சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகமும் வலி.மேற்கு பிரதேச சபையும் இணைந்து யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களிலும் பொதுமக்களிடமும் பல வகையான பொருட்களை சேகரித்து இவ்வாறு வழங்கியுள்ளன.

இதில் உலர் உணவுப் பொருட்கள், பால்மா பெட்டிகள், மருந்து வகைகள், உடுபுடைவைகள் என பல வகை பொருட்களை சேகரித்து மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்படி கழகங்கள் இணைந்து வழங்கியுள்ளன. மேற்படி கழகங்கள் இணைந்து கடந்த சில நாட்களாக யாழ். மாவட்ட வர்த்தக நிலையங்கள், பொதுமக்கள் எனப் பலரிடம் பொருட்களை சேர்த்து நேற்று முன்தினம்பாதிக்கப்பட்ட மக்களிடம்பொருட்களை நேரடியாககையளித்தனர்.(7-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்பதாண்டு செயலாற்றத்தில்

# 30-வது பட்டமளிப்பைக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தனது முப்பதாவது பட்டமளிப்பு விழாவை தற்போது நடத்துகின்றது. இத் தருணத்தில் அதன் சமுதாய மற்றும் தேசிய ரீதியிலான பங்களிப்பு பற்றி சிந்திப்பதும் பெருமை கொள்ளவதும் பொருத்தமானது.

1974 இல் திருநெல்வேலியில் யாழ்ப்பாண வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட போது புகழ்பூத்த தமிழிலக்கிய அறிஞரான பேராசிரியர் க.கைலாசபதி அதன் தலைவராக பொறுப்பேற்றார். நீண்டகாலமாக தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்து பல்கலைக்கழகம் என்ற வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்த போதும் முற்போக்கு சிந்தனை கொண்ட இடதுசாரி இயக்கத்தின் முனைப்பினால் வடபுலத்தில் ஓர் பல்கலைக்கழகம் உருவானது.

**நெருக்கடிகளுடன் வளர்தல்**

நான்கு தசாப்த கால இதன் வளர்ச்சிப் பாதையில் ஏறக்குறைய முப்பதாண்டுகள் அரசியல் நெருக்கடிகளோடு நகர்ந்தன. ஆனாலும் இப் பல்கலைக்கழகம் சவால்களோடும், பலவீனங்களோடும் நகர்ந்ததேயன்றி மூடப்படவில்லை. மேற்கு மாகாணத்திலும் தென்னிலங்கையின் பிற பகுதிகளிலும் சாதாரணநிலைகளிலிருந்தபோதும் பல தடவைகள் அவை முடங்கிக் கிடந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பௌதீக ரீதியில் தளர்ச்சியுற்றது, இடம்பெயர்ந்தது. ஆனால் செயற்பாடுகளில் தளர்ச்சியிலிருந்தபோதும் தொடர்ச்சியிலிருந்தது, செயல்களில் உயிர்ப்பிருந்தது. அமைதி திரும்புகின்ற எதிர்காலத்தை நம்பிக்கையுடன் இலக்குவைத்து அத்தகைய எதிர்கால சமூக, பொருளாதார, தொழில்நுட்ப நிர்வாக முன்னேற்றங்களுக்கான தலைவர்களை அது தயார் செய்து கொண்டிருந்தது. சமாந்தரமாக பல அரசியல் தலைவர்களையும் வடிவமைத்துக் கொண்டுதானிருந்தது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் வளாகமாகவும் இரண்டு துறைகளை




மாத்திரம் கொண்டதாகவும் ஆரம்பிக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் இன்று முழுமையான தேசிய பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றுவிட்டது.

தற்போது கலை, வர்த்தக, முகாமைத்துவ, விஞ்ஞான, விவசாய, மருத்துவ, பொறியியல், சட்ட பீடங்கள் இயங்குகின்றன. ஊடகம், அழகியல், சித்தமருத்துவம், இணை மருத்துவம், விளையாட்டு போன்ற பல துறைகளும் இணைந்து வளர்ந்துள்ளன.

இதன் வளாகங்களும் கற்றல் மையங்களும் வடமாகாணத்தின் பல புவியியல் மையங்களில் பரந்து ஒரு அறிவுசார் வலையமைப்பு பிராந்தியத்தையே உருவாக்கி விட்டன.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், மருதனார் மடம், கைதடி, கிளிநொச்சி, வவுனியா போன்ற பல இடங்களிலும் உயர் கல்வி செயற்பாடுகளையும், உயர் கல்விப் பண்பாட்டையும் இது வளர்த்து வருகின்றது.

மும்மொழி பேசும் மாணவர்கள் இலங்கையின் எல்லாப்பிரதேசங்களிலுமிருந்து இங்கு வந்து இணைந்துள்ளனர். இதனால் புதிய தேசிய பண்பாடு அதிகூடிய புரிந்துணர்வுடன் வளர்ந்து வருகிறது.

### பெருமை மிக்க உணர்வுகளுடன் பேராசிரியர் மா.சின்னத்தம்பி



**சாதனைகளின் நீட்சி**

இப் பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆளுமைவிருத்தி, ஆராய்ச்சி, விஞ்ஞான, தொழில்நுட்ப புத்தாக்கம், காலாசார வளர்ச்சி போன்ற பல நிலைகளில் இலங்கையின் தேசிய அபிவிருத்தியினதும் இது இயங்குகின்ற சமுதாய முன்னேற்றத்தினதும் மைய விசையாக தொழிற்படுகிறது.

உலகம் முழுவதும் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களிலும் ஆய்வுநிறுவனங்களிலும், முதல்தர சர்வதேச தொழில்நிறுவனங்களிலும் இப் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் பணியாற்றுகின்றனர்.

உலகின் அறிவுப் பொருளாதார வளர்ச்சியினதும், உலக மயமாதலினதும் வலுவான பங்காளர்களாக இப் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் செயற்படுகின்றனர். உலகின் முன்னணி நகரங்களில் எல்லாம் உயிர்ப்புடன் செயலாற்றும் ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் யுவதிகளையும் இப் பல்கலைக்கழகம் உருவாக்கியதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேசிய மனிதவள உருவாக்கத்தில் உன்னதமான பங்களிப்பைச் செய்துள்ளது. தொடர்ந்து செய்து வருகிறது.

இப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் இன்று இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளில் முதல்தர பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அடுத்து வரும் புதிய சகாப்தங்களை அவர்கள் அதிக விளைதிறன் மிக்கதாக மாற்றுவர் என்பது நிச்சயமானது.

**அறிவுலக தலைமைத்துவம்**

அசாதாரண காலங்களில் உயர் கல்வி நிறுவனம் ஒன்றை நிர்வகிப்பதற்கு அதிக சாதுரியமும் அர்ப்பணிப்பும், மனத்துணிவும் அபாயங்களை எதிர்கொள்ளும் தற்துணிவும் அவசியம். பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், பேராசிரியர் எஸ்.துரைராஜா, பேராசிரியர் என்.சண்முகலிங்கன் போன்றவர்களின் ஒப்புமையற்ற ஆளுமை என்றும் தமிழர்களால் நினைவு கூரப்படும். நிலைமாறும் காலத்தில் புதிய மாதிரி சவால்களை எதிர்கொண்டு நிர்வகிக்கும் பெண்துணைவேந்தரான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களது தலைமைத்துவமும் தனித்தன்மையானது.

அறிவுலகதலைமைத்துவத்தை வழங்கிய பலரின் இத்தகைய பங்கு தனித்துவமானதும் மதிக்கத்தக்கது மாகும். இத்தகைய சமூக உணர்வுகளை இப் பல்கலைக்கழகத்தின் முப்பதாவது பட்டமளிப்பு காலப்பகுதியில் நாம் அனைவரும் பகிர்ந்து கொள்வது எம்மை பெறுமதி மிக்கவர்களாகவும் நன்றியுணர்வுடையவர்களாகவும் மாற்றும் என்பது உறுதி.

---

# பல கொலைகளுக்கு பொறுப்பான கருணாவின் குற்றச்சாட்டுக்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டது

## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கொலைகளில் ஈடுபட்டதாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் இந்திய அமைதிப் படையின் புலனாய்வு பிரிவு தலைவர் கேணல் ஹரிஹரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்தக்குற்றச்சாட்டு தொடர்பில் எந்தவொரு விசாரணைக்கும் தாம் தயார். எனினும் ஏன் இந்தப் பிரச்சினை தற்போது எழுந்துள்ளது என்று ஹரிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கருணா அம்மான் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தளபதியாக இருந்தபோதே 300 முஸ்லிம்கள் காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் கொல்லப்பட்டனர். 600 பொது மக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பொலிஸார் கொல்லப்பட்டமைக்கும் கருணாவே தலைமை தாங்கினார.

எனவே அது தொடர்பான விசாரணைகளுக்கு கருணா ஒத்துழைப்பு வழங்குவார் என்று தாம் எதிர்ப்பார்ப்பதாக ஹரிகரன் குறிப்பிட்டுள்ளார்.

கருணா தற்போது கூறியுள்ள இந்தக்குற்றச்சாட்டு பெரும்பாலும் அரசியலுடன் தொடர்புடையது என்றே தாம் கருதுவதாக ஹரி கரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கருணா முற்றாக மக்களால் நிராகரிக்கப்படுவார்.

இந் நிலையில் தம்மை தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அரசியலில் ஈடுபடுத்திக் கொள்வதற்காகவே கருணா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் கருணா விடுதலைப் புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கும் இலங்கைப் படையினர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கும் விசாரணைகளை கோருவாரா? என்று ஹரிகரன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

---

# ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்களின் போராட்டத்திற்கு பூரண ஆதரவு

## வடமாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் அறிவிப்பு

போராலும் பொருளாதாரத்தாலும் நலிவுற்றுள்ள தமிழ் மக்களை திட்டமிட்டு வஞ்சிக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு நடவடிக்கையாக யாழ்.மாவட்டத்திலுள்ள ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள், கட்டுப்பாடுகளைப்பார்ப்பதாக வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று (10.11.2014) யாழ்.மாவட்ட குளிர்பான உற்பத்தி நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களினால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்ட ஊர்வலத்திற்கு தனது ஆதரவையும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களினால் நடத்தப்பட்ட ஐஸ்கிறீம், யூஸ் மற்றும் உப உற்பத்தி ஆகியவை செய்யும் 59 உற்பத்தி நிலையங்கள் வடமாகாண பிராந்திய சுகாதார பணிமனையினரால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இந்நிலையங்களில் வேலை செய்த 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேரடியாக பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே கவனயீர்ப்பு போராட்டத்திற்கு எமது ஆதரவை வழங்கும் அதேவேளை நிறுத்தப்பட்டுள்ள அவர்களின் தொழிலை மீண்டும் தொடர அனுமதியளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றேன் என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதர்களையும் நம்பி விடுவது ஆபத்து. ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் தலைதூக்கும் பிரதேசவாதம் மதவாதமே இதற்குப் பின்னணி

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையும் பற்றும் கொண்டுள்ளனர்.

எனினும் அவர் அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியமை தமிழ் மக்களிடம் மிகப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை மன்னார் ஆயர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவது அதிர்ச்சிக்குரிய விடயமன்று.

ஆனால் மன்னார் ஆயராக இருக்கக்கூடிய இராயப்பு ஜோசப் ஆண்டகை சந்தித்தமை அதிர்ச்சிக்கு உரியதே.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து மன்னார் ஆயர் விடுத்த அறிக்கைகள் தொடர்பில் தென்பகுதிப் பேரினவாதிகள் கடுமையான விமர்சனங்களை அவர்மீது தொடுத்திருந்தனர்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையை கைது செய்ய வேண்டுமென தென்பகுதி அரசியல்வாதிகள் கூக்குரலிட்டபோது எங்கள் இதயங்கள் நெருப்பாய் எரிந்தன.

எனினும் இராயப்பு ஜோசப் ஆண்டகை பனங்காட்டு நரி. அவர் எதற்கும் அஞ்சார் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் வலுவாக இருந்தது.

எனினும் மன்னார் ஆயர், வடக்கு மாகாண கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டெனிஸ்வரனுடன் சென்று பாதுகாப்புச் செயலாளரை அதிரடியாகச் சந்தித்தது எதற்கானது? அத்தகைய அவசரம் ஏற்பட்டது ஏன்? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

இராயப்பு ஜோசப் ஆண்டகை தனித்து மன்னார் ஆயர் மட்டுமன்றி அவர் தமிழ்ச் சிவில் சமூகத்தின் தலைவராகவும் விளங்குபவர். எனவே பாதுகாப்புச் செயலாளருடனான அவரின் சந்திப்பு என்பது தமிழ் சிவில் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தையும் குறிப்பதாக அமையும்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனான மன்னார் ஆயரின் சந்திப்பென்பது பாப்பரசரின் இலங்கை விஜயத்தோடு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் என்ற ஊகங்களும் உண்டு.

பொதுவில் தமிழ் மக்களின் மிக நீண்ட கால விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிவதற்கு சிங்களவர்கள் ஒருபோதும் காரணமல்ல.

எங்களின் போராட்டம் வீரியமாக இருந்த போது வடக்கு – கிழக்கு மாகாணங்களை இணைத்து உரிய அதிகாரங்களைக் கொடுப்பதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைப்பாட்டில் சிங்கள ஆட்சியாளர்கள் இருந்தனர்.

எனினும் எங்களிடம் சிலர் மதங்களை மறைமுக நோக்காகக் கொண்டு காய்க்குள் பழம் ஓடி விளையாடினார்கள். இதன் விளைவாகவும் எங்கள் இனம் தோல்வியைச் சந்திக்கலாயிற்று.

இந்தக் காய்க்குள் பழம் ஓடும் விளையாட்டு விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்னரும் நின்று போகவில்லை. இப்போதும் அது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

வடக்கு மாகாணசபையில் பிரதேசவாதம் தலைதூக்குவதன் பின்னணி கூட மதவாதம் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்துக்களை தங்களோடு சேருமாறு பௌத்த பிக்குகள் அழைக்கிறனர். ஆனால் இந்து மதத் தலைமைகள் இம்மியும் அதுபற்றிக் கருத்தில் எடுக்கவில்லை.

இவ்வாறு பெருந்தன்மையோடு இந்து மக்கள் இருக்க, தமிழினத்திற்குள் சமய வேறுபாடு ஏன்? என்பது தெரியாமல் உள்ளது.

சமயத்தின் அடிப்படையில் தமிழினம் செயற்பட நினைத்தால் அதன் விளைவு மிக மோசமாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே மதவாதங்களை ஓரங்கட்டிவிட்டு தமிழினம் என்ற ஒரே இலட்சியத்தோடு செயற்படுவதே நன்மை தரும்.

# ஆயுததாரிகள் சூழ்ந்திருந்த காலகட்டத்திலும் அஞ்சி மௌனித்திருக்கவில்லை துரைராஜா



பேராசிரியர் அழகையா துரைராஜாவின் 80 ஆவது சிரார்த்த தினத்தை மனங்கொள்ளும் இந்நாளில் (10.11.1934) அவரது ஆளுமைகள் நினைவு கூரப்படவேண்டியது அவசியமானது.

இன்றைய சூழலில் இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் நினைவு கொள்ளவேண்டிய பேராசானாக துரைராஜா காணப்படுகின்றார்.

காரணம் அவரது தோற்றம், நடத்தை, தலைமைத்துவம், மரபுகளை மதிப்பும் மனோநிலை என்பன மறக்கவே முடியாதது.

அவரது காலத்தில் மாணவனாக மட்டுமல்ல விரிவுரையாளராகவும் பணி செய்ய சந்தர்ப்பம் கிடைத்தமை மறக்க முடியாத பொக்கிஷமாகும்.

எந்தக் காலத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உழைப்பை உயர்வாகக் கருதும் துரைராஜா யாருக்கும் தலைசார்ந்து வாழ்ந்ததை காணவே முடியாது.

அவரது தோற்றத்தின் விகசிப்புக்கு அமைய நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை என்ற தமிழ் பண்பாட்டின் அடிநின்று வாழ்ந்தவர்.

ஆயுதப் போராட்ட நிழலும் இராணுவக் கெடுபிடியுமுள்ள காலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணிபுரிந்தவர்.

எந்தத் தரப்பையும் மதிப்பளிக்கும் அதேவேளை தனது மாணவர்களுக்கோ பல்கலைக்கழகத்திற்கோ துன்பம் நேரும் போது மௌனித்திருக்கமாட்டாதவர்.

இவரைக் காணும் இராணுவமோ, ஆயுதப் பிரிவினரோ அவருக்கு மதிப்பளிக்கத் தவறுவதில்லை.

அன்றைய (1988-1989) யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சூழல் மிக கெடுபிடியானது. இளைஞர்களை கட்டாய இராணுவ ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கையில் சில ஆயுதப் பிரிவினர் செயற்பட்டனர்.

வீதி வீதியாகச் சென்று இளைஞர்களை கைது செய்து கட்டாயப் பயிற்சி வழங்குவதில் முனைப்பாக இருந்தனர். இதன்போது பல பல்கலைக்கழக மாணவர்களும் அத்தகைய ஆயுதக் குழுக்களால் கைது செய்யப்பட்டனர்.

அப்போதெல்லாம் பேராசிரியர் ஒவ்வொரு ஆயுதப் போராட்டக் குழுக்களின் முகாம்களுக்கும் அலைந்து தனது மாணவர்களை மீட்டு வருவார்.

மரணத்தின் விளிம்பில்கூட மாணவர்களை பேராசிரியர் பாதுகாத்தமை அக்காலத்தில் மாணவர்களாக இருந்த எம்மவரின் அனுபவமாகும்.

மூதவை பேரவைகளில் அவரது வார்த்தைகள் கனமானதாகவும் யாருமே நிராகரிக்க முடியாததாகவும் அறிவும் மனநிலையும் கலந்ததாகவும் அமைந்திருப்பதைக் காணமுடியும்.

எப்போதும் மாணவர்களுக்காக சேவை செய்வதே பல்கலைக்கழகத்தின் உயரிய பணியெனக் கருதுபவர்.

பல்கலைக்கழகம் மாணவர்களுக்கானது. துணைவேந்தரும் கல்விசார், கல்விசாரா பணியாளர்களும் மாணவர்களுக்கான சேவையாளர்கள் என்பதை பல போராட்டங்களில் நிறுவிச் சென்றவர் பேராசிரியர் துரைராஜா.

இன்றையநாள் ஒரு பொன்னான நாள். பேராசிரியர் துரைராஜா அவர்களின் 80 ஆவது ஜனன தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நிகழ்கிறது.

இந்தப் பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்திருக்கும் மாணவர்களும் அவர்களது பெற்றோரும் பல்கலைக்கழக சமூகமும் சுமந்து செல்லவேண்டிய ஓர் உயர்ந்த உள்ளம் பேராசிரியர் துரைராஜா என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அவரது எண்ணம், மனோநிலை, அறிவு, விசாலமான திறன் என்பவை எப்போதும் தமிழ்ச்சமூகத்தினால் நினைவு கூரப்படவேண்டியது அவசியமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் பேராசிரியர் அவர்களின் நினைவுகளைச் சுமக்கும் காட்சியகம் ஒன்றுநிறுவிஅவரதுவாழ்வை பொக்கிஷமாக்குதல் வேண்டும்.

**கலாநிதி**
**கே.ரி.கணேசலிங்கம்**

## யாழில் 80 ஹெக்டேயரில் உருளைக்கிழங்கு செய்கை

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் 80 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

இந்த செய்கைக்கு தேவையான 1000 அந்தர் (1 அந்தர் - 50 கிலோ) உருளைக்கிழங்கு விதைகள் நேற்று முன்தினம் விவசாய பணிமனைக்கு வந்தடைந்துள்ளன.

உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்வதற்காக பதிவு செய்த் விவசாயிகளுக்கு அவர்களின் செய்கைக்கு ஏற்ற அளவு விதை கிழங்குகள் வழங்கப்படவுள்ளன.

விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, இம்மாதம் இறுதிக்குள் உருளைக்கிழங்கு செய்கைகள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் 135 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் புதனகிழமை முற்பகல் 9 மணியளவில் பாடசாலையின் பிரதான அரங்கில் அதிபர் தி.இரவீந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய பிரதித் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கொ.வரதராஜமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"

*-மூப்பர் அம்பிலோசியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)*

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### துரியாதீத தவம்- பலன்கள்



✦ பொறுமை, விட்டுக்கொடுத்தல், ஈகை ஆகிய மூன்று பண்புகள் குண்டலினி யோகிகட்குத் தானாக அமையும்.(Tolerance, Adjustment & Sacrifice)

✦ இயற்கையின் மறைபொருட்களை உணரமுடியும்.

✦ மக்களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் ஆகிய உருவ அமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல் வலிவு, சுகம், செல்வம் ஆகிய ஏழையும் நல்ல நிலைக்கு மாற்றி இணைய வைக்கிறது.

✦ வினைப்பதிவுகளை மாற்றுகிறது

✦ மனதின் மறுமுனையான தன்னைத் தெய்வத்தோடு இணைக்கிறது.

✦ தன்முனைப்பு, பழிச்செயல் பதிவுகள், வேண்டாப்பற்று என்று கூறப்படும் மும்மலங்களையும் நீக்கி விழிப்பு நிலைக்கு வரவழைக்கிறது.

✦ யோகிகள் பற்றறிவினின்று விடுபட்டு கற்றறிவில் ஈடுபட்டு முடிவில் முற்றறிவில் லயம் ஆவர்.

✦ பிரவிருத்தி மர்க்கத்தினின்று விடுபட்டு நிவர்த்தி மார்க்கத்திற்கு ஈர்க்கிறது.

✦ புலனடக்கம் உண்டாகி அறிவு அமைதியடையச் செய்கிறது..

✦ பிரம நிலையான உண்மை அறிவதற்கு நுண்மையறிவு ஏற்படச் செய்கின்றது.

✦ எல்லை கட்டிய தன்மையினின்று விடுபடச் செய்கிறது.

✦ பகுதி அறிவு ஆனது முழுமையை நோக்கிப் பயணம் ஏற்க உதவுகிறது.

✦ மனம் ஓடாது, தன்னை மறவாது மனதைப் பயிற்சிப்படுத்த வேண்டும். மனமே செயற்படும்.

✦ எண்ணம், சொல், செயலால் எவருக்கும் எப்போதும் நன்மையே விளைவிக்க நாட்டமாயிருக்கச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மத்திய கல்லூரியை வீழ்த்தி சம்பியனாகியது மானிப்பாய் இந்து

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கி டையில்




நடைபெற்ற காற் பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி மூன்றாவது முறையாக மானி ப்பாய் இந்து கல்லூரி அணி சம்பிய னாகியது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு சங்கம், பிரித்தா னிய நாட்டின் இலங்கை தமிழ் பாட சாலைகள்




விளையாட்டு சங்கத்தின் ஆதர வுடன் வருடாந்தம் நடத்தும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடை யிலான காற்பந்தாட்ட போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்து கல்லூரி மைதானங்களில் இடம்பெற்றது. முதற்சுற்றுப்போட்டிகள் முடிவடை ந்து இறுதிப்போட்டி கடந்த வியாழக்கி ழமை யாழ்பாணம் மத்திய கல்லூரி

மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர் த் து மானிப்பாய் இந்து கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் தொட ங்கய நேரம் முதல்மானிப்பாய் இந்து அணியின் பலம் ஓங்கி காணப்பட்டது. அவ் வணியின் என்.தனுசன் தனது அணிக்கான முதல் கோலை பெற்றுக்கொடுத்தார். சில நிமிட ங்களில் அவ்வணியின் எம்.ஜனா ர்த்தனன் அணி க்கான 2 வது கோலையும் அடித்தார்.

முதல் பாதியாட்டத்தில் மானி ப்பாய் இந்து கல்லூரி அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன் னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி புது உத்வேகத் துடன் விளையாடியது.

அதன் யபனாக அவ்வணியின் வீரர் பி.விதுசன் அணிக்கான முதல் கோலை அடித்தார். மேற் கொண்டு கோல்கள் அடிப்பதற்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முய ன்ற போதும், அந்த முயற்சிகள் மானிப்பாய் இந்து அணி யின பின்கள வீரர்களின் சாதுரிய த்தால் முடியாமல் போனது.

இறுதியில் மானிப்பாய் இந்து கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வெற்றி பெற்ற அணி மற்றும் சிறந்த வீரர்க ளுக்கானகேடயங்களைவடமாகாண கல்வி பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் வழங்கினார் (க.23)

# சுழிபுரம் விக்டோரியாவை வென்றது சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக் கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலை கள் கிரிக்கெட் சங்கத்தின் 13 வயதிற்குட்பட்ட பாட சாலை அணிகளிற்கிடை யிலான கிரிக்கெட் போட்டி கள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் ஒரு அங்கமாக சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோ தயாக் கல்லூரிக்கு மிடையிலான போடடி ஒன்று இடம்பெற்றது.

இதில் சுழபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயற்சுழற்சியில் வென்ற சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பாடிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி 34.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 78 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சுழி புரம் விக்டோரியாக் கல்லூரி சார்பில் துஜாவன் 18 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி சார்பில் டன் ஷன் 15 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக ளையும் பிருந்தன்14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னி ங்சில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 55.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழ ந்து 156 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ராகுலன் 43 ஓட்டங் களையும் பிருந்தன் 36 ஓட்டங் களையும் தனுஷன் 20 ஓட்டங் களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுழிபுரம் விக்டோ ரியாக் கல்லூரி சார்பில் பிரஷாந் 11 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தனது 2ஆம் இன்னி ங்சில் துடுப்பாடிய சுழிபுரம் விக்டோ ரியாக் கல்லூரி 13 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 22 ஓட்டங் களைப் பெற்றிருந்த போது போட்டி நேரம் நிறைவடைந்தது. இதில் வேணுகாந் 9 ஓட்டங்களை அணி க்காக பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந் தவரோதயாக் கல்லூரி சார்பில் டன்ஷன் 10 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதன்படி முதல் இன்னிங்சில் 77 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோ தயாக் கல்லூரி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சாதனையில் மத்யூஸ்

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இந்த ஆண்டு அதிக ஓட்டங் கள் எடுத்த வீரராக இலங்கை அணித்தலைவர் மத்யூஸ் இருக்கிறார்.



இவர இந்த ஆண்டு ஒருநாள் போட்டிகளில விளையாடி 838 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இவருக்கு அடுத்த படியாக 800 ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர் வரிசையில் சங்கக்காரா 802 ஓட்ட ங்கள் குவித்துள்ளார்.

135 ஒருநாள் போட்டிகளில் விளை யாடியுள்ள இவர் ஒரு சதம் கூட அடிக்க வில்லை.அந்த வரிசையில் பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக், நியூசி லாந்தின் ஆண்டிடீவ் ஜோன்ஸ் ஆகியோர் இருக்கின்றனர். (க)

# சகல துறையிலும் அசத்தி ஷாகிப் புதிய சாதனை



சிம்பாவே அணியுடன் நடந்த 2வது டெஸ்ட் போட்டி யில் சதம் விளாசியதுடன் (137 ரன்) இரண்டு இன்னி ங்சிலும் தலா 5 விக்கெட் வீழ்த்திஆல்ரவுண்டராகஜொலி த்தார் வங்கதேச வீரர் ஷாகிப் அல் ஹசன். டெஸ்ட் கிரிக் கெட் வரலாற்றில், ஒரே போட் டியில் சதம் மற்றும் 10 விக் கெட் வீழ்த்தும் சாதனையை நிகழ்த்தியுள்ள 3வது வீரர் என்ற பெருமை அவருக்கு கிடைத்துள்ளது.

முன்னதாக இங்கிலாந்தின் இயான் போத்தம் (114 ரன், மொத்தம் 13 விக்கெட்) 1980 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராகவும், பாகிஸ்தானின் இம்ரான்கான் (117 ரன், 11 விக்கெட்) 1983 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராகவும் இச்சிறப்பை பெற்றிருந்தனர். ஆனால் ஒரு சுழற் பந்து வீச்சாளர் இச்சாதனையை நிகழ்த்துவது இதுவே முதல் தடவையாகும்.

27 வயதான ஷாகிப் அல்-ஹசன் நிருபர்களிடம் கூறுகையில், இப்படி யொரு சாதனை இருப்பதை சில வாரங்களுக்கு முன்பு பத்திரிகையாளர் ஒருவர் என்னிடம் கூறியிருந்தார். நாமும் அச்சாதனைப் பட்டியலில் இணைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டேன்.

அதிர்ஷ்டவசமாக இந்த டெஸ்டிலேயே அதை செய்திருக்கிறேன் என்றார். வங்களாதேசம்-சிம்பாவே இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும்12 ஆம் திகதி சிட்டகாங்கில் தொடங்குகிறது. (க)

# தங்க காலணி விருதை வென்றார் போர்த்துக்கலின் ரொனால்டோ

நடப்பாண்டுக்கான சிறந்த காற்பந்து வீரருக்கான தங்கக் காலணி விருது போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டது.



29 வயதான ரொனால்டோ இந்த விருதை மூன்றாவது முறையாக பெற்றுள்ளார். ஸ்பெயினின் மெட்ரிட் நகரில் நடைபெற்ற விழா வில் ரியல் மெட்ரிட் அணியின் தலைவர் புரோ ரின்டோ பீரிஸ் இந்த விருதை ரொனால்டோவுக்கு வழங்கினார்.

அப்போது பேசிய ரொனால்டோ, முதல் முறையாக இந்த விருதைப் பெறுவது போன்ற உணர்வு ஏற்படு வதாகக் தெரிவித்தார்.

விளையாட்டில் இன்னும் சில காலம் வெற்றிக் கொடி நாட்ட முடியும் என நினைக்கின்றேன். ஆனா லும் ஓய்வுபெறும்போது உலகின் தலைசிறந்த காற்பந்து வீரர்களில் ஒருவராக நிச்சயம் திகழ் வேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களவுக்கு...

அச்சந்திப்பையடுத்து மங்கள சமரவீர சிங்கப்பூருக்கு பயணமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு சிங்கப்பூர் சென்றுள்ள மங்கள சமரவீர நாடு திரும்பியதும் ஜனாதிபதியுடன் மற்றுமொரு முக்கிய சந்திப்பு இடம் பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியின்பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவிற்கு பிரதி தலைவர் பதவி வழங்கப்பட்டதையடுத்தே பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அரசாங்கத்துடன் இணைவதற்காக வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது சர்வதேச அழுத்தங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மங்கள சமரவீரவை அரசாங்கத்துடன் இணைய வேண்டாம் என கூறியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மங்கள, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்துகொண்டாராயின் அமைச்சரவையில் இன்று திங்கட்கிழமை மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரியவருகின்றது.

மங்கள சமரவீர, அரசாங்கத்துடன் இணைந்துகொண்டால் அவருக்கு வெளிவிவகார அமைச்சர் அல்லது துறைமுக அமைச்சர் பதவியை வழங்க அரசாங்கம் இணைங்கி கொண்டுள்ளதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

'எங்கள் இதயத்தில் குடியிருக்கும் இதய வீணையே

அகவை 57ல்

வாழ்த்துகிறேன் வாழ்க'

### டக்ளஸ் தேவானந்தா

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)



பார்வில் நலமாக வாழ பலர்
செல்வத்தை சேர்ப்பார்கள் – எங்கள்
தலைவா நீங்கள் தமிழ் பெருங்குடி
மக்களின் இதயத்தை நேசித்து
அவர்களின் துன்பத்தை போக்கினீர்கள்
அதனால் உலகெல்லாம் பரந்துவாழும்
இலட்சோப இலட்சம் தமிழ் மக்களின்
அன்பை வென்றீர்கள் – எங்களுக்கு
வாழ வழிகாட்டினீர்கள்
இப்புனித உங்கள் பிறந்தநாளில்
உங்களை வாயார வாழ்த்த
'வார்த்தைகளும் என் கைவசம் இல்லை
உங்களை வாயினால் வாழ்த்துவதற்கு
பூக்களும் என் கைவசம் இல்லை
உங்களை பூக்கொண்டு பூசிப்பதற்கு'
வாழ்க வளமுடன்

வாழ்த்துபவர்:
திரு. பெ. திருச்செல்வன் (JP) (செல்வா)
தீயணைப்புப் படை உத்தியோகத்தர்,
யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(8269)

# மரண அறிவித்தல்



## திருமதி நடராசா கமலாம்பிகை

(வேலணை நடராசா ஆசாரியார் - ஸ்தாபகர் மாரிமுத்து கட்டட ஒப்பந்த நிறுவனம்)

வேலணை 06 வங்களாவடியை பிறப்பிடமாகவும் இல.51, துரைராசா வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா கமலாம்பிகை நேற்று (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா–சிவக்கொழுந்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை–சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும், நேசகுமார் (மாரிமுத்து கட்டட ஒப்பந்த நிறுவனம் கொக்குவில்), ராமகுமார் (கனடா), குகனேஸ்வரி, வரதகுமார் (கனடா), தேவகுமார் (கொக்குவில்), புவனேஸ்வரி (புஸ்பா), நடனகுமார் (பிரான்ஸ்), தயானகுமார் (கனடா), சுரேந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல் :
ந. நேசகுமார், ந. தேவகுமார்
(மகன்மார்) 0212221406

51, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(8277)




யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதி
அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான

## மஹா கும்பாபிஷேகம்

12.11.2014

### கிரியைகள் ஆரம்பம்

இன்று (10.11.2014) திங்கட்கிழமை காலை 5 மணி

### எண்ணெய்க் காப்பு

நாளை (11.11.2014) செவ்வாய்க்கிழமை
காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை

### மஹா கும்பாபிஷேகம்

எதிர்வரும் (12.11.2014) புதன்கிழமை
காலை 7.15 முதல் 8.30 மணிக்குள் நடைபெறும்

மஹா கும்பாபிஷேக குரு
சிவஸ்ரீ க.மு.சோமசுந்தரக்குருக்கள்

ஆலய அர்ச்சகர் – சிவஸ்ரீ. சோ.கேதீஸ்வரசர்மா

அனைவரும் வருக! வைரவப்பெருமான் அருள் பெறுக!!

314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777222568

ஆலய தர்மகர்த்தா
பா.ராகவன்

(8274)

## கௌரவ அமைச்சருக்கு பிறந்ததின வாழ்த்துக்கள்

அகவை 57–ல் கால்பதிக்கும் அருமைத் தோழர்,
அன்புத் தலைவர், கதிர்வேலர் மகேஸ்வரியம்மா
பெற்றெடுத்த மாண்புமிகு கௌரவ டக்ளஸ்
தேவானந்தா அவர்களே



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

"கொடியில் தெரியும் ஒரு வெள்ளி – அருட்கோலத் தமிழன் விடிவெள்ளி"
கடலகத்து மீனவரின் கதையை கேட்டு கண்ணீரால் நிரம்பிய எம்
வாழ்வைப் பார்த்து அழைத்தவர் குரல் கேட்டு ஓடிவந்து கரம்
கொடுக்கும் வள்ளலே!

காற்றடித்தாலும் கடலடித்தாலும் இழுவைப் படகுகள் எமதுவளம்
அழித்து வளம் குன்றிப் போனபோதும் கடற்றொழிலாளர் அபிவிருத்தி
அமைப்பினை உருவாக்கி வாழ்வாதாரம் வழங்கிய எம்மவரை சொந்தக்
காலில் நிற்பதற்கு வழி செய்த தோழரே! தங்கள் பணி தொடர நாங்கள்
அணிதிரண்டு வாழ்க! வாழ்கவென வாழ்த்துகிறோம்.

கடற்றொழிலாளர்
அபிவிருத்தி அமைப்பு, வடமராட்சி

(8299)

## 57-வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

புதையலாய் எமக்கு கிடைத்த புது மலரே!... வாடாமல்
வாசம் வீசு... வாழ்வில் வசந்தமாய் எங்களோடு.
நாங்கள் கொண்டாடும் உங்கள் பிறந்தநாளை
நாளை உலகே கொண்டாட...
நலமாய் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

(8273)

வாழ்த்துவோர்:
வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம்
(இலங்கை போக்குவரத்துச் சபை)
(யாழ் சாலை, பருத்தித்துறைச் சாலை, காரைநகர் சாலை,
கிளிநொச்சி சாலை, முல்லைத்தீவு சாலை, வவுனியா சாலை,
மன்னார் சாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயநிர்ணய உரிமை...

வும் 1987 ஆம் ஆண்டு தனக்கென மட்டுமன்றி இலங்கை வாழ் வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் 1987 ஆம் ஆடின் இலங்கை - இந்திய உடன் படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டது.

உண்மையில் இந்தியாவின் எதிர்பார்ப்பு ஒன்றாய் இருக்க இலங்கை அரசாங்கம் கொடுத்த பதில் யாப்புத்திருத்தமும் அதையொட்டிய மாகாண சபைகள் சட்டமும் ஒரு கையால் கொடுத்த அதீகாரங்களை மறுகையால் திரும்ப எடுப்பது போல் அமைந்திருந்தன.

அதாவது, ஆளுநரின் குறுக்கீட்டுக்கு ஆன வழி தேடி ஆவணம் அமைத்து தந்ததைப்பறிக்க அரசியல சதி செய்யப்பட்டது. ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்க முடியாது என்பதுதான் நாம் முக்கியமாக கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதொன்றாகும். ஒற்றையாட்சியின் ஒரேஒரு அதிகார மையம் இது தான் என்று எமது அரசியல் யாப்பு மத்தியையே சுட்டிக் காட்டுகின்றது.

மத்திய மனமுவந்து அதிகாரங்களை பகிர முன்வந்தால்தான் மாகாணங்கள் தம் மக்கள் நலனுக்காக பாடுபடலாம் வடமாகாண இனப் பரம்பரையே மாற்றியமைத்து பெரும்பான்மையினரை உள் நுழைத்து கிழக்கு மாகாணம் போல் பெரும்பான்மையினரை வடக்கிலும் பெருவாரியாக குடியிருத்த இராணுவ மூலமாக நடவடிக்கை எடுத்துவரும் மத்திய அரசாங்கம் மனமுவந்து எமக்கு அதிகாரங்களை பகிர்ந்து கொடுப்பார்கள் என்று எதிர் பார்க்க முடியாது.

அதுதான் தறபோதைய நிலை. எல்லா விதத்திலும் எம்மை இயங்க விடாது தடுப்பதே அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கின்றது.

அதிகாரம் இல்லாத வடமாகாண சபைக்கு ஏன் நீங்கள் தெரிவானீர்கள் என்று கேட்டீர்கள் நியாயமான கேள்வி அது. முன்னர் இது போல் கிழக்கு மாகாண சபை தேர்தலை நாங்கள் பகிஷ்கரித்ததால் அரசாங்கத்தின் கை ஓங்கி தமிழ் பேசும் பிரதேசமான கிழக்கு மாகாணம் பாரிய சிங்கள ஊடுருவல்களுடன் தற்போது காட்சியளிக்கின்றது.

இதே நிலை வடமாகாணத்தை பாதிக்கக் கூடாது என்பதாலேயே வலுவற்ற, வெறிதான 13 ஆவது திருத்தச் சடடத்தின் கீழ் நாம் தேர்தலில் முன் நிற்க முடிவெடுத்தோம் என்றார்.

## கருவுக்கு ஐ.தே.க...

தலில் கரு ஜயசூரிய பொது வேடபாளராக போட்டியிட போவதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியானதை தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கரு ஜயசூரியவை தொடர்பு கொண்டு வாழ்த்தியுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான தலைவராக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொது வேட்பாளராக போட்டியிடவோ அல்லது பக்ஷ அரசாங்கத்திற்கு எதிரான எதிர் கட்சியின் பொதுவேட்பாளரை ஆ... கவோ முன்வந்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை மகிந்த ரா... பக்ஷ இழந்து விடுவார் என்பது இங்கு முக்கியமான அம்சமாக இருக்கும் என சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. இதேவேளை இன்று எதிரணியின் பொது வேட்பாளர் யார் என்பது பெரும்பாலும் தெரியவரும்.


## பதவிக்கான தேடல்

சர்வதேச ரீதியில் 30 வருட காலமாக இயங்கிவரும்
**Canadien** நிறுவனத்தின்
புதிய கிளைகள் கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால் 4 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன.
★அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
★O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
0770771377, 0771908997, 0771882507
(8276)








யாழ்.பல்கலைக்கழகத்தில்
10.11.2014 இல்
தொழில் நிர்வாக மாணி
(B.B.A Hons) பட்டம்பெறும்
அரசகேசரி ஆதவன்
அவர்களை

பெத்த வீட்டில் வித்தைகள் செய்தவன்
செத்த வீட்டினில் சித்தியும் பெற்றவன்
சொந்த வீட்டையும் விட்டு வந்தவன்
எங்கள் குடும்பத்தை குதூகலிக்க வைத்தவன்
தொழில் நிர்வாக மாணி ஆதவன் அவன்

வாழ்த்துவோர்
கருணா சித்தா, பாஸ்கரன் மாமி,
அதி குடும்பத்தினர். (8285)


## நினைவு...

எடுக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிகக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிலச்சரிவில் புதையுண்டவர்களை கண்டுபிடிப்பதற்குமான தேடுதல் நடவடிக்கைகள் கடந்த 12 தினங்களாக மேற்கொள்ளபட்டு வந்தன.

இந்நிலையிலேயே தேடுதல் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இநத நிலச்சரிவில் புதையுண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்ற போதிலும், சரியான எண்ணிக்கை 35 தான் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அமரவீர கூறியுள்ளமை குறிபபிடத்தக்கது.

## இன்று...

ஆராயவிருப்பதாகவும் நீதிமன்றத்தின் வியாக்கியானம், ஜனாதிபதி காரியலாயத்துக்கு இன்று திங்கட்கிழமை எழுத்து மூலம் அனுப்பிவைக்கப்டும் என்று தெரிவிககப்படுகின்றது.




## கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர் கலாநிதி
விநாயகமூர்த்தி
சிவசாமி

எமது துறையின் வளர்ச்சிக்கு பன்னெடும் காலமாக பங்காற்றிய முன்னாள் பேராசிரியர் கலாநிதி சிவசாமி அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இசைத்துறையினர் யாழ்//பல்கலைக்கழகம்
(C-9017)



## 2013/2014 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!!

World Education Consultancy
# இலவச கல்விச்சுற்றுலா

NORTHSHORE CAMPUS-COLOMBO



தலைநகர் கொழும்பை மையமாக கொண்டு
இயங்கிக்கொண்டிருக்கும்
NORTHSHORE UNIVERSITY ஐ பார்வையிடுவதற்குரிய
அரிய சந்தர்ப்பம்

மாணவர்கள் 14ம் திகதி பி.ப 5.00 க்கு முன்னதாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
(பெண்பிள்ளைகள் உங்கள் பெற்றோர்களின் உதவியுடன் வரமுடியும்)

மேலதிக விபரங்களுக்கு:
WORLD EDUCATION CONSULTANCY
(சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)
0779265447 0217200989
(C-9013)



THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக
2880 DPI



Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)

NEW Photo Quality Printing

Jana Digital 0770731654

Photo Quality 40/=
Normal Quality 35/=

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=
3 வருட உத்தரவாதம்

Sticker Print 70/=
Backlit Print 70/=

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
021 221 3233, 077 073 1654
(7849)



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101
(C-9012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.